திருவள்ளுவர் ஆண்டு 2041 கண்ணிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
கேவல் காட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறு தோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1-க்கு ரூ. 1,
கோர்ட் விளம்பரம் கண்டலம் 1-க்கு ரூ. 2,
நிறுத்த விளம்பரத்துக்கு தனி விசாரம்

ரோடு, பிரஜோத்பத்தி ஐப்பசி மீ 4உ (17—1—1932) மலர் 38

பலமுள்ளவீரபுருடனுக,

குமாரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மோத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, பத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பலியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகங்கரும்.

48-நாள் பஸ்டம் விலை ரூ. 20. 24-நாளுக்கு ரூ 10.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கொப்பள எண்ணெய்

மாதாந்தா காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கொப்பரசயம், இனப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கொப்பரம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் காசரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்:

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கில் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுல் தயாரித்து 31 ஆண்டு களாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கொடியோஸ் சபாலத்தில் தங்கி, சபால இடி, குத்தல் சேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், காசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குறைகளும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொகுருமல், காசமாகவும், நீக்களில் தங்கி, சூலைனாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயத்தில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதகடட்டிகள், பக்க வலி இழுபபு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு தொனிக்கும் [விரிக்கிர பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நான்பாலியதே ஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றவருவது பிரத்தியகூம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிற்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம்வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சுயமரியாதைச் சுடர்! முதல் இதழ் வெளிவந்துவிட்டது!

சுயராஜ்ஜியம் யாருக்கு?

(முதற் பாகம்.)

தோழர், M. சிங்காரவேலு B. A., B. L.,

எழுதியது.

நமது "சுயமரியாதைச் சுடர்" என்னும் புத்தக வரிசையில் மேற்கண்ட புத்தகம் முதல் இதழாக வெளிவந்து விட்டது. இதில் அறிஞர் சிங்காரவேலு, வழக்கமாக வள்ள தமது எளிய நடையில் மிக ஆணித்தரமாக, சமூகக்கொடுமை, ஜாதிக்கொடுமை, மதக்கொடுமை, அரசியல் கொடுமை, பொருளாதாரக் கொடுமை, முதலிய வற்றையும் காங்கிரசின் கள்ள நியாயம், தீண்டாமை யொழிப்பு, முதலிய பல விஷயங்களையும் நன்கு எடுத்துக்காட்டி யிருக்கின்றார்.

விலை அணா ஒன்று தான்.

தமிழ் நாடெங்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

தாராளமான நிபந்தனைகள்! ஏராளமான கமிஷன்!

விபரங்களுக்கு உடனே எழுதவும்.

விலாசம்:—

கற்பகம் கம்பெனி, (புத்தக இலாக்கா)
257, லிங்கசெட்டித் தெரு,
ஜி. டி: மதராஸ்.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜ. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஸ்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

காந்தி பக்தியும் ராமபக்தியும் ஒன்றே.

இல்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க விரும்பினால் நமது

தங்கபஸ்பம்

மனோரஞ்சித லேகியத்தில் சேர்த்துச்சாப்பிடுங்கள்.

தாது கூஷீணத்தை நிவர்த்திக்கும். தாது விர்த்தியடையும். நீத்துப்போன இந்திரியத்தை இறுக்கி மணியாக்கி விடும். அடங்காத ஆண்மை, வீரியம் உண்டாகும். சோம்பல், அசதி, சோர்வு நீங்கும். தேக பலம், தேஜஸ், அறிவு வளர்ச்சி, மனே வலிமை உண்டாகும். 30 வேளை தங்க பஸ்பம் ரூ. 7. 30 வேளை லேகியம் ரூ. 3. வி. பி. செலவு வேறு. வெளிநாட்டார் ஆர்டருடன் ரூ. 5 முன்பணமனுப்பவும்.

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

S. ராஜகோபால் பிள்ளை, தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

பெரிய இடத்துக் கலியாணமும் கதைகளும்

(கைவல்யம்)

கலியாணம் அதிக நாட்களோடும், ஆடம்பரச்சிலவோடும் செய்யாமல் சுருக்கியும், சுருக்கமான காலத்திலும் செய்யவேண்டுமென்று பல காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அதை அநேகமாக எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். சுருக்கிச்செய்ய முடியவதில்லையென்றும் மூன்று நான்கு நாளில்லாமல் கலியாணத்தின் சீர்களை முடிக்கமுடியாதென்றும் அவ்விதம் செய்தால் ஜனங்கள் கேலிமாக நினைக்கிறார்களென்றும் பலர் சொல்லுகிறார்கள். ஆடம்பரச்சிலவோடு அதிகநாள் தள்ளி கலியாணம் செய்து கடனில் அவதிப்படும் பலர் அதன் முழுத்தொல்லையும் அவசியமில்லாததையும் உணர்ந்துமிருக்கிறார்கள். முன்யோசனையில் காணவேண்டியதைப் பின் யோசனையில் கண்டாலும் பிரயோஜனமில்லை.

பண்டைகாலக் கலியாணம் பந்துக்களோடும் பக்கத்துச்சினேகிதர்களோடும் உள்ளூர்கோவில் வாத்தியத்தோடும் தீர்ந்து வண்ட, அதிரசம், வாழைப்பழம், பழயசோறு, நீரோசார், வெத்திலை பாக்கோடு திருப்தியடைந்து விடும்.

இப்பொழுதுள்ள கலியாணங்களோ பந்துக்கள், அரிமூகன்தார்கள், மிட்டா, மிராஸ், ஜெமீன்தார்கள், வியாபாரிகள், பாங்குக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், அவர்கள் ஆபீஸ் குமாஸ்தாக்கள், தாலூக்கா ஜில்லா போர்டுமெம்பர்கள், பிரசிடெண்டுகள், முனிசிப்பால்ட்டி கௌன்சிலர்கள், சேர்மென்கள், அவர்கள் குமாஸ்தாக்கள், சினேகிதர்கள், மாஜி மெம்பர்கள், பிரசிடெண்டுகள், கண்ணில்கண்ட, காதில் கேட்ட, பத்திரிகையில் பார்த்த பக்கத்து மனிதன் சொன்ன பெரிய மனிதாகள், அழைக்காமலும்வரும் சால்நிரிகள், வைதீகர்கள், யாத்திரை வாசி சாமியார்கள், சங்கீதப்பிரியர்கள், முன்றுநான் காலந்தள்ள நினைப்பவர்கள், ஆடம்பரத்தைப் பார்க்க வருகிறவர்கள், மாப்பின்னைவீடு பெண்வீடென்று கண்டுபிடிக்க முடியாதவர்கள், கலியாண வீட்டிற்குப்போனால் கதையோ கச்சேரியோவைத்துக் கொள்ளும ஏற்பாடுசெய்து கொள்ளலாமென்று வருகிற பாகவதர்கள், மரியாதையான யாசகர்கள், இனம் கேட்பவர்கள், சொக்கா சோப்பைத் தேடுகிறவாகள், குழந்தைகள கழுத்தையும் கையையும கவனித்து வருகிறவர்கள, இத்தனை போகளுடைய வண்டிக்காராகள், மோட்டார்காரர்கள் கூடவரும் ஆள்க்காராகள் இத்தனைபோகளும சோந்தால்தான் பணக்காரர்களின் கலியாணம் பரிபூர்ணமாகிறது.

பேணி, லாடி, ஜிலேப்பி, ஆப்பின், ஆரஞ்சி, காப்பி, டீ, சோடா, பிராண்டி, சிகரெட், வாசனைப்பாக்கு, புகையிலை, சண்ணும்பு, வெளியூர் தங்க நாகசரம், பாண்டு, பாட்டுக்கச்சேரி, கதை, ஆரம், பூச்செண்டுஇவைகளால் பூரணபடுகிறது. இந்தக் கலியாணத்தை நடத்துவதற்குள்ள கஷ்டமெட்கப்படுகிறார், கோபத்தைச் சொல்லமுடியாது. தேக கஷ்டத்தைப் பார்த்தால் தாயார் சகிக்கான். பொருள் விரயத்தைப்பார்த்தாலோ தேடினவன் பிணமொரு முறை செத்தே போவான். பெருமையோ அன்றுதான். தொந்தரவோ பின்னே குட்டிகளையும் பிடித்துக்கொள்ளுகிறது. லாபமோ முஸ்தாதி, ஹஷ்டோ மதகடி ராஜசக்கும், ஊடித்தோட்டத்திற்கும், மேலடிப் புஞ்சைக்கும் வந்துவிடுகிறது.

இத்தனை கூட்டங்களையும் அதனதன் அந்தஸ்துக்கு அவரவர்களையே கவியாதற்கு, சௌகரியத்திற்கு, பெருமைக்குப் பிரியத்திற்கு, ஆணையத்திற்கு, அதிகாரத்திற்கு, அவகன் காட்டும் அசம்பாவிதத்திற்கு, ஜாதிக்கு, சமயத்திற்கு, வழக்க பழக்கத்திற்கு, வைதீகத்திற்கு தக்கபடி வைத்து உபசரித்து வழியனுப்புவதற்குள்ள பிரயாசையோ சொல்லத்தரமன்று.

பலருக்குத் தனிவீடு, பலருக்குத் தனி யறை, சிலருக்கு பங்களாவும் வேண்டும். எத்தனை இடம் தயார் செய்தாலும் இடம் பத்துவதில்லை. தனிச்சாப்பாடு, தனி சமயல். வைதீக சமயல் பத்தியச்சாப்பாடு வந்திருக்கும் பாகவதர்கள், பாட்டுக்காரர்கள், மேளக்காரர்கள் இவர்களும் பிரபுக்களைப்போல தேகத்தை வளர்த்திக்கொண்டு வருகிறவர்களான படியால் பழய காலத்து மேளக்காரர்களைப்போல வாசலில்வண்ணான்மாத்தைக் கொடித்துப்படுத்துக் கொள்ளச் சொல்லவும் முடிவதில்லை. அவர்களுக்கும் தனி வீடு தனிச்சாப்பாடு வேண்டும். ஒருவர் ஒன்று கேட்பார், மற்றவர் மற்றொன்று கேட்பார், பின்னொருவர் வெகு அவசரமாக வேறொரு சௌகரியம் வேண்டுமென்பார். மத்தியில் பத்தர்களும் பாகவதர்களும் பத்தியைகாட்டிக்கொள்ள கற்பூரம் கேள்ப்பார்கள். நித்தம் எள்ளு இரைக்காமல் சாப்பிடாதவர்களு மிருப்பார்கள். அவர்கள் எள்ளுங் கேட்பார்கள். இந்தப் பெரிய கலியாணத்தின் உக்கிராணவீட்டில் எள்ளும் கற்பூரமும் தேடி எடுத்து வருவது சாதாரணமா? எள்ளும் கற்பூரமும் கேட்பவர்கள் முக்கியமானவர்களாக விருப்பார்கள். அவர்கள் வரவை எதிர்பார்த்து இன்னும் சில முக்கியஸ்தர்களும் அவர்கள்கூட நின்ற விடுகார்கள் அதற்குள் பந்தியின் முக்கிய இடம் பலரால் நிறைந்து விடுகிறது அதைப் பார்த்த கலியாண எஜமான் அவசரப்படுகிறார், பல்லைக்கடிக்கிறார், மரியாதையும் மதிப்பும் போய்விட்டதாக வர்கள் நினைப்பதுகொஞ்சம். யாரி இரைப்பது அதிகம். நேரத்தில் சோறு போடமுடியாது. சலிப்பும் சங்கடமும் மலிந்துவிடும். இத்தனைக்கும் ஆளாகிறதைவிட பெருமையென்று நினைத்துக்கொள்ளும் பிரமையைவிட்டு ஒருநாள் கலியாணம் செய்தால் கலியாணத்திற்குக் கலியாணமும் ஆகும் கண்டவர்களுக்குபதிலும் சொல்லவேண்டியதுமில்லை.

இப்பொழுதுபெரிய இடத்துக்கலியாணமென்றால் கதை இருந்தே தீரவேண்டுமென்றுவிட்டது. அந்தக் கதைகளுக்கு அரிகதாகாலக்ஷேபமென்கிறார்கள். கலியாணவீட்டில் மங்கள மானபகவான்களுடைய கல்யாணக் கதைகளை நடத்தினால் அதுபோலமைக்கும்கலியாணங்களுக்கும் மங்களமானகேஷ்மம் உண்டாகுமென்று சாஸ்திரிகளும் பண்டிதர்களும் சொல்லுகிறார்கள். அலைப்பணக்காரர்களும் படித்தவர்களும் ஒத்துக் கொண்டு கதைகளும் நடந்து வருகின்றன. சீதாகலியாணம், ருக்குமணிகலியாணம், சுந்தரிகலியாணம், பார்வதிகலியாணம், வள்ளியம்மைகலியாணம், திரோபதை சுயம்பரம் முதலிய கதைகளே கலியாணவீட்டில் நடக்கும் கதைகள். இக்கதைகளைக் கலியாணவீட்டில்நடத்தினால் மணமக்களுக்கு நன்மையுண்டாகுமென்று பாகவதர்களும் பாகவதர்களும் சொல்லுகிறார்கள். அதைதாமும் நம்புகிறோம் மேற் சொன்னதெய்வ கலியாணங்களில் ஒரு கலியாணமாவது சுகப்பட்டதும்வாழ்ந்ததுமில்லை எப்படி?

சீதாகல்யாணம்.

சீதைக்குக் கலியாணமானஉடனே காட்டுக்குப் போய் ஜனஸ்தன், விராதன், காகாசுரன் இவர்களால் துன்பப்பட இராவணனால் பரிஜனங்களுடம்பிறைப்பட்டு புருஷனால் சந்தேகப்பட்டு அக்கினிமூழ்கி ஊருக்குவந்தும்வண்ணான் வேலமாகப் பேச பின்னும் தனியாகக் காட்டில்கொண்டுபோய்விட அஞ்சுபாய்ப்பிள்ளை பெற்று அவதிப்பட்டதே சீதையின் வாழ்க்கை சீதையைப் போலகஷ்டப்படஎந்தப் பெண்ணின்தகப்பனுமகஷ்டப்படமாட்டான்.

உருக்குமணிகலியாணம்.

தனக்குப் பெண்ஜாதி இருக்கஇன்னொருவனுக்கு தாமானகாளைபெண் ணைபலாத்காரமாக தேரில் தூக்கிவரும்மாப்பின்னையை எந்தமாமனுக்கும் விரும்பமாட்டார்கள். அதுவுமலலாமல் அதேக பெண்களைபுடையவன் ஸ்ரீகிருஷ்ணன் விசாரத்தால்கருங்குஷ்டமுடையவன் அதனைதான் உருக்குமணிக்குக்குழந்தையில்லாமல் போய்விட்டது. தகப்பனவீட்டில்பெண்களுக்கு சோறும் துணியும கையுமயிலாமலில்லை. ஒழுக்கமுடைய மாப்பின்னையையே விரும்புகிறார்கள். கிருஷ்ணனுக்கு இருந்தபெண்களினிலக்கையில உருக்குமணியின்வாழ்க்கையில் உருக்குமணியினமுறைக்கு காள்கிடைத்ததோ இல்லையோ பெற்

தொடர்ச்சி 18ம பக்கம் பாருங்கள்.

மூடம்--அடிமை எங்கிருந்து?

"ஸ்க்ருஉ லூஸ்"

ஒருகாலத்தில் நான் சிறுபைய னாயிருந்தேன். நான் மாத்திரம் ஒரு காலத்தில் சிறுவனாக இருந்ததில் ஒரு அதிசயமுமில்லை. நீங்களும் சிறுவர்களாக இருந்திருப்பீர்கள். எனது அந்தச் சிறுபருவத்தில் நான் மிகவும் தஷ்டன். படிப்பைத்தவிர மற்ற விஷயங்களில் கெட்டிக்காரன். வீட்டில் உள்ள தின்பண்டங்களைத் திருடுவதில் பக்காத் திருடனும் எனக்கு ஈடாகமாட்டான். நாவல்மரம், மாமரம், புளியமரம், இலைகளில் எறி கிளைக்குக்கிளை தாவுவதில் கிடாக்குரங்கும் எனக்கு ஈடாகாது. தண்ணீரில் நீந்துவதில் மீன் கூட்டமும் தோற்றுப்போகும். எருமை மாட்டைப்போல் தண்ணீரைக்கண்டால் ஆனந்தம் அதிகம். சதா அதிலேயே மூழ்கிக்கிடப்பேன். ஒன்றைப்பத்தாகப்புனைந்து கூறுவதில் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரின் என்னைக்கண்டு சலாம் போட வேண்டும். இல்லாத விஷயங்களை உண்டாக்கிக்கூறுவதில் யாரும் எனக்கு இணையில்லை. சுவனகாதிகளுக்குப்பதினென் புராணங்களையும் கூறிய சூதமுனிவன் என்னிடம் கைகட்டி வாய்புதைத்து நின்றுகற்றுக்கொண்டு போகவேண்டும்.

இவ்வளவு காரியங்களையும் நான் ஒவ்வொருநாளும் செய்துதான் தீரவேண்டும். இந்த லட்சணத்தில் பள்ளிக்கூடத்திற்கும் போய்க்கொண்டிருந்தேன். பரீட்சைகாலத்தில் உபாத்தியாயருக்குப்பணம் கொடுத்துக் கேள்வித்தாழ் வாங்கிப்படித்து எழுதிவிடுவேன். சில சமயங்களில் அடுத்த பையனைப்பார்த்து எழுதிவிடவேன். சில சமயங்களில் விடைத்தாள்களைத்திருத்தும் பரீட்சகருக்கு "சொர்ண புஷ்பம் சமர்ப்பியாமே" பண்ணி பரீட்சையில் தேறுவேன். இந்தமாதிரியே தெலுகுதத்தம் பண்ணி ஆறுவது வகுப்பில் வந்து சேர்ந்துவிட்டேன். அப்பொழுது எனக்கும், உபாத்தியாயருக்கும் வகுபபில் அடிக்கடி சச்சரவு நடப்பதுண்டு. அச்சச்சரவுகளில் சிலவற்றைச்சொல்லவேண்டுமென்பது தான் எனது ஆசை. அதற்காகத்தான் இவ்வளவு தூரம் அளந்தேன்.

எனக்கு அடிக்கடி கதை கேட்பதில் பிரியம் அதிகம். ஆகையால் உபாத்தியாயரை அடிக்கடி கதை சொல்லச்சொல்லுவேன். உபாத்தியாயர் என்னுடைய வேண்டுகோளை எப்பொழுதும் மறுப்பது இடையாது. ஏனென்றால் நான் கேட்ட விஷயத்தை அவர் சொல்லாவிட்டால் வகுப்பில் பாடம் நடக்காது. ஏதாவது சில்லரை விஷயங்கள் செய்துகொண்டே இருப்பேன். என்னை அடிக்கவும் உபாத்தியாயருக்கு பயம். அடித்துவிட்டால் அவர் தெருவோரு போகும்போது நான் எங்கேயாவது ஒரு சந்தில் ஒழிந்துகொண்டு அவர் மேல் சாணியுருண்டையை விட்டெறிவேன். ஆகையால் அவர் என்னை அடிப்பதில்லை; நான்கேட்ட விஷயத்தைச்சொல்லிவிடுவார்.

ஒரு நாள் இராமாயணக்கதை சொன்னார். அப்பொழுது அவர் "தசரதன் பிள்ளையில்லாமைபால் புத்திரகாமேஷ்டி யாகம் பண்ணினான். அதிலிருந்து ஒரு பூசகம் ஒரு தாம்பாளத்தில் பாயாசம் கொண்டு வந்தது. அதைத்தசரதன் தனது மூன்று மனைவி மார்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்தான். அதனால் அவர்கள் கருத்தரித்தார்கள்" என்று சொல்லிக்கொண்டு வரும்போது எனக்கு ஒரு பலமான சந்தேகம் வந்துவிட்டது.

உடனே நான் உபாத்தியாயரைப் பார்த்து "சார் இந்தமாதிரியாரு சார் கதை எழுதியிருக்காங்கோ" என்று கேட்டேன். உடனே அவர் 'கம்பர் பாடிய ராமாயணத்தில் செல்லுகிறார்.' என்றார். நான் 'சார் அப்படியானு, எங்க ஊட்டுலே அடிக்கடி பாயாசம் வைக்கிறாங்க, நா, எங்க அப்பா, எங்க அம்மா, எங்க அக்கா எல்லோரும் சாப்பிடுறோம். நாங்க ஒருத்தரும் கொர்ப்பமாவலியே" என்றேன். உடனே உபாத்தியாயர் "அடே! மூட்டான், அந்தப் பாயாசம் யாகத்திலிருந்து வந்ததடா? தெய்வ அருளினால் பூசகங்கொண்டுவந்த பாயாசம். அதனால் தான் கொர்ப்பமானார்கள்" என்றார். நான் "நீங்க சொன்னது பொய் சார், நாம்பமாட்டே" என்றேன். அவர், "அடே துஷ்டப்பயலே, இதையெல்லாம் பரிகாசம் பண்ணுதே. உன் நாக்கு அழுகிவிடும். தெய்வீகத்தன்மையுள்ள ராமன் பிறப்பைப்பொய் என்று சொல்லலாமா. இதை நம்பவேண்டும். நம்பாவிட்டால் பாவம்" என்று பயமுறுத்தினார். நானும் இதைக்கேட்டவுடன் பயந்து அது உண்மைதான் என்று நினைத்துக்கொண்டேன். பிறகுகதை முழுதும் சொல்லி முடித்தார்.

மற்றொரு சமயம், களவு கதை சொல்ல ஆரம்பித்தார். அப்போது, "அண்ணப்பறவை களரிடமிருந்து தமயந்தியால் தூது போய்ப் பேசிற்று" என்று சொல்லும்போது எனக்கு நிஜமென்ற சந்தேகம் வந்துவிட்டது. உடனே எழுந்தேன். "சார்! சார்! அண்ணப்பறவை எப்படிப்பேசும்? சார்" என்றேன். அவர், "அடே மூட்டான்; அதெப்பிரசங்கி, அது பிரமதேவன் வசிக்கிற சத்திய லோகத்து அண்ணப்பறவையடா! அதனால் தான் பேசிற்று" என்றார். நான் "சார்! அப்படியானு? பிரமதேவன் இக்கிறவன் யாரு? அவனுமே எங்கு? பிரயோசனம்? சத்தியலோகம் எங்கேயிருக்கு?" என்றேன். அவர், "பிரமதேவன் தான் நம்மைப்படைத்த கடவுள். அவர் இல்லாவிட்டால் நாம் உண்டாக முடியாது. அவர் வசிக்கின்ற உலகிற்குத்தான் சத்தியலோகம் என்று பெயர். அது மேலேயிருக்கிறது" என்றார். நான் 'சார்! நீங்க சொல்றது பொய். நான் நம்பமாட்டேன். நம்ம அப்பாவும், நம்ம அம்மாவுந்தானே நம்மைப்பெத்தாங்க. இப்பவும் பொம்பிளைங்க தானே புள்ளே பெக்கிறாங்க. அப்புடியிருக்க, பிரம தேவன் நம்மைப்படைச்சா, அவன் மேலேயிருக்கா, இண்ணு சொல்றீங்களே என்னுசார் நீங்க சொன்ன தெல்லாம் பொய்யாகவே இருக்கே" என்றேன். உடனே அவர் அடே காலிப்பயலே, நீ எப்பொழுதும் இப்படித்தான் நான் சொல்லுவதை உண்மையென்று நம்பவேண்டும். இல்லாவிட்டால் அடிப்பேன்" என்று மிரட்டினார். உடனே நான் பயந்து வாய் பேசாமல் இருந்துவிட்டேன்"

மற்றொரு நாள், குசேலன் கதை சொல்ல ஆரம்பித்தார் அப்போது "குசேலருக்கு 27 பிள்ளைகள் இருந்தார்கள். குசேலர் காட்டுக்குப் போனார். புஷ்தானியங்களைப்பொறுக்கிக்கொண்டு வருவார். அதை அவர் மனைவி வறுத்துக்குற்றி அரிசியாக்குவாள். அவ்வரிசையைக்கஞ்சியாகக் காய்ச்சுவாள். குசேலருக்கும் கொடுப்பாள். என்னாப்பிள்ளைகளுக்குமொவ்வொரு அகப்பை கொடுப்பாள் அவைகள் கஞ்சியே போதாமல் அழும். கீழே இடந்து புரளும். ஒன்றோடொன்று சண்டை செய்யும்" என்று சொல்லும்போது, எழுக்கம் போலத்தோன்றி எனது மனதில் சந்தேகமுண்டாயிற்று. உடனே 'சார் 27 பிள்ளைகள் இண்ணு சொன்னீங்களே. அப்பிள்ளைகளுக்குள்ளே, மூத்த பிள்ளைக்கு கொறைஞ்சது 27 வயசாவது இருக்காதே? அந்தப் புள்ளைகூடவா கஞ்சி பத்தாது இண்ணு சொல்லித் தெருவிலே கெடந்து அழுவும்? என்சார் அது போய் எதாவது சம்பாதிச்சுக்கிட்டு வரக்கூடாது?" என்றேன். உடனே அவரால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. ஆடிதிருடின கள்ளனைப்போல் விழித்தார். கீழே பார்த்தார். மேலே பார்தார். தலையைச் சொரிந்தார். ஒன்றுஞ் சமாதானஞ்சொல்லவில்லை. பிறகு சிறிது கோபத்துடன் "அடே இவையெல்லாம் பெரியோர்களால் கூறப்பட்டவைகள். இவைகளில் நாம் சந்தேகப்படக்கூடாது. கேள்வி கேட்பது தவறு பாவம். இனி யாரும் நான் சொல்லும் கதைகளில் கேள்வி கேட்கக்கூடாது. கேட்டாலும் சொல்ல முடியாது. மறுபடியும் கேட்டால் கண்டிப்பாய் அடி விழும்" என்று சொல்லி விட்டார்.

அதன் பின், நான் இரண்டொரு தடவை கேள்வி கேட்டேன். அதன் பலன் என்ன? உபாத்தியாயருடைய பதில் கிடைக்கவில்லை. அவர் செவ்கோல் செலுத்தினார். அதாவது அடித்தார், அது தான் பலன். அதற்குப்புறம் கேள்வி கேட்க எனக்கென்ன பைத்தியமா? கேட்பதேயில்லை. மற்ற பிள்ளைகளோடு நானும் ஒரு பிள்ளையாக வகுப்பில் இருந்து விட்டு வந்து விடுவேன். அந்த வருஷத்தில் நான் பெற்ற பலன் பரீக்ஷையில் தேறுமல் போனது தான்.

எதற்காக இந்த பழங்கதைகளைச் சொல்ல வந்தேன் தெரியுமா? பள்ளிக்கூட உபாத்தியாயர்களால் தான், நமது அறிவு மழுங்குகிறது என்பதற்காகத்தான்.

உபாத்தியாயர்கள் பகுத்தறிவற்றவர்கள் கிராமபோன் மிஷின்கள். கர்வம் படைத்தவர்கள். புஸ்தகப்பூச்சிகள். சிறு குழந்தைகளின் சிந்தனா சக்திக்கு இடங்கொடாதவர்கள் கண்மற்ற முழுந்தைகள் மனத்தில், மூடநம்பிக்கைகளை உற்பத்தி செய்கிறவர்கள். அடிமைப்புத்திக்கு விதை போடுகிறவர்கள். இப்படித்தான் இருக்கிறார்கள் முற்போதைய உபாத்தியாயர்களும்.

ஆகையால் உங்கள் குழந்தைகள் உருப்படியாக வேண்டுமானால்-பகுத்தறிவுடையவராக வேண்டுமானால், மூட நம்பிக்கையுடைய உபாத்தியாயர்கள் தொலையவேண்டும். மூட்டான் உபாத்தியாயர்கள் ஒழியவேண்டும். பகுத்தறிவுடைய உபாதத்தியாயர்கள் பிறக்கவேண்டும். குழந்தைகளின் சிந்தனை சக்திக்கு இடங்கொடுக்கின்ற உபாத்தியாயர்கள் தோன்ற வேண்டும்.

இவ்வாறு நான் சொல்லுவதால் உபாத்தியாயர்கள் என் மேல்கோபித்துக்கொள்ளலாம். பூனை போல் சிறிழலாம். நாய் போல் குரைக்கலாம். புலி போல் பாயலாம். ஆனால் அதற்கெல்லாம் நான் பின்வாங்க மாட்டேன். நமது "ஸ்க்ருஉ" ழன்று விட்டதால் எதற்கும் துணிவேன். நானும் ஒரு உபாத்தியாயராய் இருந்தவன் தான். அதனால் தான் இவ்வளவு நேரம் சொந்தம் பாராட்டிச் சொன்னேன். சுருக்கமாகச்சொல்ல வேண்டுமானால்-உங்கள் மனத்தில் படும்படி சொல்ல வேண்டுமானால் "இப்பொழுது நமது நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்கள் யாவும், அறிவை வளர்க்கும் இடங்கள் அல்ல. தன்னம்பிக்கையை உண்டாக்கும் இடங்கள் அல்ல. ஆராய்ந்தன்மையை உண்டாக்கும் இடங்கள் அல்ல; மூட நம்பிக்கைகளையும், அடிமைப்புத்தியையும் சிருஷ்டித்துக் கொடுக்கும்

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

(I)

நமதுபாரதநாட்டை, ஆங்கிலத்தில் "இந்தியா" வென்று வழங்குவார்கள். இந்த நாடு, பேர்பாதி, இங்கிலீஷ்காரர்களாலும், மீதி சுதேச சிற்றரசர்களாலும், ஆண்டுவரப்படுகிறது. இவ்விரு ஆட்சியிலும், சுமார் 35 கோடி ஜனங்கள் வாழ்கின்றார்கள். இவர்களில், 5 கோடி, டட்டினங்களிலும், மற்ற மீதி 30 கோடியும் கிராமங்களிலும், வசிக்கின்றனர். இம்மூப்பத்தைந்து கோடியில், ஒரு கோடி மூன்று வேளை நன்றாய்ப் புசிப்பவர்களும், முப்பத்தி நான்கு கோடி, கால், அரை, முக்கால் வயிர் புசிக்க பாக்கியம்பெற்றுள்ளவர்களுமாயிருக்கின்றனர். பட்டினங்களிலும், கிராமாந்தரங்களிலும், 100-க்கு 90-பேருக்கு வசிக்க சுகவீடு இல்லை. பெரும்பான்மையோர் குடியானவர்கள் என்று சென்ற ஸென்ஸஸில் (Census) கணக்கிட்டிருக்கின்றார்கள். இப்பெருங்கூட்டத்திற்கு, கங்களுக்குசொந்தமென்று சொல்ல ஒரு ஸெண்டு நிலங்கூட கிடையாதாம்! இப்பெரும்பான்மையோருக்கு, 1000 கோடி ரூபாய் கடனுளதாம்!! இவர்களில், நிலமுள்ள சிலருக்கு, கடனில் முழ்காத நிலமில்லையாம்!!! மொத்தத்தில் சொல்லவேண்டுமானால், "புண்யபூமி" என்றுவழங்கும் நமதுபாரதநாட்டில்வாழும் பெருவாரி மக்களுக்கு, "வாய்க்கு அரிசி" அதாவது செத்தவர் வாயில்போடும் அரிசிக்குக்கூட வழி இல்லையாம்! என்னுடன்கூட வாழும் லட்சத்திற் குமேறபட்டவர் மீன்பிடிப்வர்களில், சாவு எடுக்கக்கடன் படாதவர் வெரு வருமில்லை. இதே கதியில், பாரத மக்கள் வாழ்கின்றார்களென்று இந்த நாட்டின் பொருளாதார நிலமையைக் கற்றுணர்ந்தோர், ஒவ்வொருவரும், சொல்லுகின்றார்கள். தாதாபாய் நவரோஜி முதல், நேற்று "கலக இந்தியா" நூலை இயற்றிய (Rebel India) பெரேயில்ஸ்பர்ட் (Brailsford) என்ற பெரியார் வரையிலுமுள்ள பொருளாதார நூலாசிரியோர்களால் வறைந்துள்ள நமது தேசத்தின் படம் இதுவே.

பொருளாதார நிலை இவ்விதமிருக்க, சமூக வாழ்க்கையின் கோலத்தை சற்று நோக்குவோம். பிறந்த 100 குழந்தைகளில், 33 ஒரு வயதிற்குள் இறக்கின்றன. ஜீவிக்கும் முதியோரில், 1000 பேரில், 30 முதல் 50 வரை, ஒரு வருஷத்தில், இறக்கின்றார்கள். சராசரி வயது நமக்கு 27 தான் இன்சூரன்ஸ். அதாவது சாவுபண்டுகளில், நம்மை 27 வயதிற்குமேல் ஜீவிப்பதாகக்கணக்குவடுப்பதில்லை. இந்த நமது அகோரவாழ்க்கையைவிட உலகில் எங்குமில்லை. ஆனால், நம்மை ஆளும் ஆங்கில நாட்டில், சராசரி வயது 50, பெண்களுக்கு 53, நூற்றுக்கு, ஒன்பது குழந்தைகளே இறக்கின்றது. முதியோரில், 1000ல், இறப்பவர்கள் 13 தான். இந்தக்கேவல நிலமை போதாதென, மதத்தின் கொடுமையால் அகால மரணத்தில் சாகின்றவர்கள் எத்தனை? ஜாதி வேற்றுமையில் சாகின்றவர்கள் எத்தனை? பால்ய கல்யாணத்தில் சாகின்ற பெண் குழந்தைகள் எத்தனை? விதவைகளெத்தனை? வருமையால்பசித்துத்தன் புருவோர் எத்தனை? விலக்கக்கூடிய நோய்களில் மடிகின்றவர் எத்தனை?

இந்த தண்பங்கள் போதாதென அறியாமையால் வளரும் தண்பங்கள் எத்தனை? மாமாங்கம், பெரியபாளையம், லட்சத்தீபம், கும்பாபிஷேகம், முதலிய உற்சவக் கூட்டங்களில் விஷநோய்களால் பீடிக்கப்படுவோர்எத்தனை? நமது நாட்டு சுகாதாரக் கேட்டை சற்று நோக்கில், காணும் காட்சி பயங்கரத்தைக்கொடாமல் இராது. கொள்ளை நோய்களுக்கு நமது பாரதநாடு இருப்பிடமாகவே ஆய்விட்டது. வாந்தி பேதி இல்லாத நாள் ஒன்று கூட இல்லை. மடிகின்றவர்களில், மூக்கால் வாசிவிஷசுரங்களால் சாகின்றார்கள். இந்த நோய்களியாவும் தடுக்கக் கூடியவையே. அப்படி இருந்தும் இந்நாட்டில் கொள்ளை நோய்களுக்குக் குறைவே இல்லை.

நமது பூமியில். கோயில் இல்லாவூர் இலலை. பூசை நடக்காவூர் இல்லை. உற்சவங்களில் மேலிட்டன: அதனைத் திருத்தி பிராமணரல்லாதாரும் சரி சமத்துவமாக அடையவேண்டுமென்பார் ஜஸ்டிஸ் கட்சியார். தாழ்த்தப் பட்டவர்களும் தங்களுக்கும் பட்டமும், பதவியும் சரியாக அளிக்க வேண்டுமென பெரும் கூச்சலிடுகின்றார்கள். மற்றொரு பக்கத்தில், இந்து மதத்தை ஓர் அரசியல் கட்சியாக வைத்திருக்கும் இந்து மகாசபையார் தங்கள் மதத்திற்குக் குறைவு ஏற்படாமலிருக்க, இந்து ஆட்சி பலப்பட வேண்டுமென்பார். இதற்கு நேர்விரோதமாக மகமதியர் தங்கள் மகமதியமதம் இக்கட்சிகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாத்தல் வேண்டும்; இனி வரும் அரசியலில், தனித்தொகுதி தங்களுக்கு வேண்டுமென கர்ஜனை செய்கின்றார்கள். ஒரு மூலையில், சீக்கியரும், இன்னொரு மூலையில் பார்சீகாரும், தனித் தொகுதியில் தங்கள் ஜன சமூகம் இன்புற்று வாழமுடியும் என்பார். இவர்கள் மத்தியில் புதிதாகத் தோன்றிய சுயமரியாதை கூட்டத்தார், மதங்கள் ஒழிய வேண்டும்; ஜாதி நீங்க வேண்டும்; பகுத்தறிவு நிலைக்க வேண்டும்; சமூக கொடுமைகள் தொலைய வேண்டும் என்று பிரசாரங்கள் செய்து வருகின்றார்கள். நமது நாட்டு நோய்களுக்கு இத்தனை வயித்தியர்கள்தோன்றி இருக்கின்றார்கள். எத்த வயித்தியம் பலிக்கும்?

தேசம் தெய்வலோகமாகும் என்றார் காந்தியாரும்! பிராமண ஆதிக்கம் அரசியல் உத்தியோகங்களில் மேலிட்டன: அதனைத் திருத்தி பிராமணரல்லாதாரும் சரி சமத்துவமாக அடையவேண்டுமென்பார் ஜஸ்டிஸ் கட்சியார். தாழ்த்தப் பட்டவர்களும் தங்களுக்கும் பட்டமும், பதவியும் சரியாக அளிக்க வேண்டுமென பெரும் கூச்சலிடுகின்றார்கள். மற்றொரு பக்கத்தில், இந்து மதத்தை ஓர் அரசியல் கட்சியாக வைத்திருக்கும் இந்து மகாசபையார் தங்கள் மதத்திற்குக் குறைவு ஏற்படாமலிருக்க, இந்து ஆட்சி பலப்பட வேண்டுமென்பார். இதற்கு நேர்விரோதமாக மகமதியர் தங்கள் மகமதியமதம் இக்கட்சிகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாத்தல் வேண்டும்; இனி வரும் அரசியலில், தனித்தொகுதி தங்களுக்கு வேண்டுமென கர்ஜனை செய்கின்றார்கள். ஒரு மூலையில், சீக்கியரும், இன்னொரு மூலையில் பார்சீகாரும், தனித் தொகுதியில் தங்கள் ஜன சமூகம் இன்புற்று வாழமுடியும் என்பார். இவர்கள் மத்தியில் புதிதாகத் தோன்றிய சுயமரியாதை கூட்டத்தார், மதங்கள் ஒழிய வேண்டும்; ஜாதி நீங்க வேண்டும்; பகுத்தறிவு நிலைக்க வேண்டும்; சமூக கொடுமைகள் தொலைய வேண்டும் என்று பிரசாரங்கள் செய்து வருகின்றார்கள். நமது நாட்டு நோய்களுக்கு இத்தனை வயித்தியர்கள்தோன்றி இருக்கின்றார்கள். எத்த வயித்தியம் பலிக்கும்?

நமது பாரதநாட்டில், சுமார் 35 கோடி ஜனங்கள் வாழ்கின்றார்கள். இவர்களில், 5 கோடி, டட்டினங்களிலும், மற்ற மீதி 30 கோடியும் கிராமங்களிலும், வசிக்கின்றனர். இம்மூப்பத்தைந்து கோடியில், ஒரு கோடி மூன்று வேளை நன்றாய்ப் புசிப்பவர்களும், முப்பத்தி நான்கு கோடி, கால், அரை, முக்கால் வயிர் புசிக்க பாக்கியம்பெற்றுள்ளவர்களுமாயிருக்கின்றனர். பட்டினங்களிலும், கிராமாந்தரங்களிலும், 100-க்கு 90-பேருக்கு வசிக்க சுகவீடு இல்லை. பெரும்பான்மையோர் குடியானவர்கள் என்று சென்ற ஸென்ஸஸில் (Census) கணக்கிட்டிருக்கின்றார்கள். இப்பெருங்கூட்டத்திற்கு, கங்களுக்குசொந்தமென்று சொல்ல ஒரு ஸெண்டு நிலங்கூட கிடையாதாம்! இப்பெரும்பான்மையோருக்கு, 1000 கோடி ரூபாய் கடனுளதாம்!! இவர்களில், நிலமுள்ள சிலருக்கு, கடனில் முழ்காத நிலமில்லையாம்!!! மொத்தத்தில் சொல்லவேண்டுமானால், "புண்யபூமி" என்றுவழங்கும் நமதுபாரதநாட்டில்வாழும் பெருவாரி மக்களுக்கு, "வாய்க்கு அரிசி" அதாவது செத்தவர் வாயில்போடும் அரிசிக்குக்கூட வழி இல்லையாம்! என்னுடன்கூட வாழும் லட்சத்திற் குமேறபட்டவர் மீன்பிடிப்வர்களில், சாவு எடுக்கக்கடன் படாதவர் வெரு வருமில்லை. இதே கதியில், பாரத மக்கள் வாழ்கின்றார்களென்று இந்த நாட்டின் பொருளாதார நிலமையைக் கற்றுணர்ந்தோர், ஒவ்வொருவரும், சொல்லுகின்றார்கள். தாதாபாய் நவரோஜி முதல், நேற்று "கலக இந்தியா" நூலை இயற்றிய (Rebel India) பெரேயில்ஸ்பர்ட் (Brailsford) என்ற பெரியார் வரையிலுமுள்ள பொருளாதார நூலாசிரியோர்களால் வறைந்துள்ள நமது தேசத்தின் படம் இதுவே.

பொருளாதார நிலை இவ்விதமிருக்க, சமூக வாழ்க்கையின் கோலத்தை சற்று நோக்குவோம். பிறந்த 100 குழந்தைகளில், 33 ஒரு வயதிற்குள் இறக்கின்றன. ஜீவிக்கும் முதியோரில், 1000 பேரில், 30 முதல் 50 வரை, ஒரு வருஷத்தில், இறக்கின்றார்கள். சராசரி வயது நமக்கு 27 தான் இன்சூரன்ஸ். அதாவது சாவுபண்டுகளில், நம்மை 27 வயதிற்குமேல் ஜீவிப்பதாகக்கணக்குவடுப்பதில்லை. இந்த நமது அகோரவாழ்க்கையைவிட உலகில் எங்குமில்லை. ஆனால், நம்மை ஆளும் ஆங்கில நாட்டில், சராசரி வயது 50, பெண்களுக்கு 53, நூற்றுக்கு, ஒன்பது குழந்தைகளே இறக்கின்றது. முதியோரில், 1000ல், இறப்பவர்கள் 13 தான். இந்தக்கேவல நிலமை போதாதென, மதத்தின் கொடுமையால் அகால மரணத்தில் சாகின்றவர்கள் எத்தனை? ஜாதி வேற்றுமையில் சாகின்றவர்கள் எத்தனை? பால்ய கல்யாணத்தில் சாகின்ற பெண் குழந்தைகள் எத்தனை? விதவைகளெத்தனை? வருமையால்பசித்துத்தன் புருவோர் எத்தனை? விலக்கக்கூடிய நோய்களில் மடிகின்றவர் எத்தனை?

இந்த தண்பங்கள் போதாதென அறியாமையால் வளரும் தண்பங்கள் எத்தனை? மாமாங்கம், பெரியபாளையம், லட்சத்தீபம், கும்பாபிஷேகம், முதலிய உற்சவக் கூட்டங்களில் விஷநோய்களால் பீடிக்கப்படுவோர்எத்தனை? நமது நாட்டு சுகாதாரக் கேட்டை சற்று நோக்கில், காணும் காட்சி பயங்கரத்தைக்கொடாமல் இராது. கொள்ளை நோய்களுக்கு நமது பாரதநாடு இருப்பிடமாகவே ஆய்விட்டது. வாந்தி பேதி இல்லாத நாள் ஒன்று கூட இல்லை. மடிகின்றவர்களில், மூக்கால் வாசிவிஷசுரங்களால் சாகின்றார்கள். இந்த நோய்களியாவும் தடுக்கக் கூடியவையே. அப்படி இருந்தும் இந்நாட்டில் கொள்ளை நோய்களுக்குக் குறைவே இல்லை.

நமது பூமியில். கோயில் இல்லாவூர் இலலை. பூசை நடக்காவூர் இல்லை. உற்சவங்களில், 33 ஒரு வயதிற்குள் இறக்கின்றன. ஜீவிக்கும் முதியோரில், 1000 பேரில், 30 முதல் 50 வரை, ஒரு வருஷத்தில், இறக்கின்றார்கள். சராசரி வயது நமக்கு 27 தான் இன்சூரன்ஸ். அதாவது சாவுபண்டுகளில், நம்மை 27 வயதிற்குமேல் ஜீவிப்பதாகக்கணக்குவடுப்பதில்லை. இந்த நமது அகோரவாழ்க்கையைவிட உலகில் எங்குமில்லை. ஆனால், நம்மை ஆளும் ஆங்கில நாட்டில், சராசரி வயது 50, பெண்களுக்கு 53, நூற்றுக்கு, ஒன்பது குழந்தைகளே இறக்கின்றது. முதியோரில், 1000ல், இறப்பவர்கள் 13 தான். இந்தக்கேவல நிலமை போதாதென, மதத்தின் கொடுமையால் அகால மரணத்தில் சாகின்றவர்கள் எத்தனை? ஜாதி வேற்றுமையில் சாகின்றவர்கள் எத்தனை? பால்ய கல்யாணத்தில் சாகின்ற பெண் குழந்தைகள் எத்தனை? விதவைகளெத்தனை? வருமையால்பசித்துத்தன் புருவோர் எத்தனை? விலக்கக்கூடிய நோய்களில் மடிகின்றவர் எத்தனை?

இந்த தண்பங்கள் போதாதென அறியாமையால் வளரும் தண்பங்கள் எத்தனை? மாமாங்கம், பெரியபாளையம், லட்சத்தீபம், கும்பாபிஷேகம், முதலிய உற்சவக் கூட்டங்களில் விஷநோய்களால் பீடிக்கப்படுவோர்எத்தனை? நமது நாட்டு சுகாதாரக் கேட்டை சற்று நோக்கில், காணும் காட்சி பயங்கரத்தைக்கொடாமல் இராது. கொள்ளை நோய்களுக்கு நமது பாரதநாடு இருப்பிடமாகவே ஆய்விட்டது. வாந்தி பேதி இல்லாத நாள் ஒன்று கூட இல்லை. மடிகின்றவர்களில், மூக்கால் வாசிவிஷசுரங்களால் சாகின்றார்கள். இந்த நோய்களியாவும் தடுக்கக் கூடியவையே. அப்படி இருந்தும் இந்நாட்டில் கொள்ளை நோய்களுக்குக் குறைவே இல்லை.

நமது பூமியில். கோயில் இல்லாவூர் இலலை. பூசை நடக்காவூர் இல்லை. உற்சவங்களில் மேலிட்டன: அதனைத் திருத்தி பிராமணரல்லாதாரும் சரி சமத்துவமாக அடையவேண்டுமென்பார் ஜஸ்டிஸ் கட்சியார். தாழ்த்தப் பட்டவர்களும் தங்களுக்கும் பட்டமும், பதவியும் சரியாக அளிக்க வேண்டுமென பெரும் கூச்சலிடுகின்றார்கள். மற்றொரு பக்கத்தில், இந்து மதத்தை ஓர் அரசியல் கட்சியாக வைத்திருக்கும் இந்து மகாசபையார் தங்கள் மதத்திற்குக் குறைவு ஏற்படாமலிருக்க, இந்து ஆட்சி பலப்பட வேண்டுமென்பார். இதற்கு நேர்விரோதமாக மகமதியர் தங்கள் மகமதியமதம் இக்கட்சிகளின் அட்டகாசத்திலிருந்து பாதுகாத்தல் வேண்டும்; இனி வரும் அரசியலில், தனித்தொகுதி தங்களுக்கு வேண்டுமென கர்ஜனை செய்கின்றார்கள். ஒரு மூலையில், சீக்கியரும், இன்னொரு மூலையில் பார்சீகாரும், தனித் தொகுதியில் தங்கள் ஜன சமூகம் இன்புற்று வாழமுடியும் என்பார். இவர்கள் மத்தியில் புதிதாகத் தோன்றிய சுயமரியாதை கூட்டத்தார், மதங்கள் ஒழிய வேண்டும்; ஜாதி நீங்க வேண்டும்; பகுத்தறிவு நிலைக்க வேண்டும்; சமூக கொடுமைகள் தொலைய வேண்டும் என்று பிரசாரங்கள் செய்து வருகின்றார்கள். நமது நாட்டு நோய்களுக்கு இத்தனை வயித்தியர்கள்தோன்றி இருக்கின்றார்கள். எத்த வயித்தியம் பலிக்கும்?

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாகவருகின்றது.

ஆண்சேந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-

சுவாமி சிவதேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India, Ltd., Bombay No. 10.

தொழிற்சாலைகள்" என்று தான் சொல்லுவேன். இன்று நமது வால் நீண்டு விட்டது. மன்னித்துக்கொள்ளுங்கள். இவ்வளவோடு அடக்கிக் கொள்ளுகிறேன். வந்தனம் பிறகு சந்திக்கிறேன்.

சீர்திருத்தப்போர்.

(இலங்கை தே. ஈ. புஷ்பராஜன்)

எத்தேசத்தை நோக்கினும் இளைஞர்களின் சீர்திருத்தம், முன்னேற்றம், சுதந்தாமெண்னும்பேரிறைச்சலின் ஒலிநமது செவியை செவிடுபடச்செய்கின்றன. அவ (இளைஞர்)ர்களின் வீர உணர்ச்சி ததும்பும் வார்த்தைகள் கண்டோர் அதிசயிக்கத்தக்க செய்கைகள், சுதந்திரத்திற்காக இரத்தத்தைச் சிந்தி வெற்றிபெற்ற விதங்கள், யிசைத் தருபெனமநித்த போராடிய தியாகங்கள், போன்ற செய்கைகளை நினைக்குந் தோறும் நெஞ்சம் பரவசமடைகின்றன. ஆனால் இந்தியாவின் இளைஞர்களை நினைக்கும் பொழுதே நெஞ்சம் பதை பதைக்கின்றது; என்னையறியாமலே கண்களில் நீர்ததும்புகின்றது. எனதெழுதுகோல் என்னுடன் ஒத்துழைக்க மறுக்கின்றது.

அந்(மேல்)நாட்டில் மதம் போச்சு, கடவுள் போச்சென தொண்டைகிழிய கத்தும் வைதீகர்களை ஒழித்தவர்கள் யார்? மூட்டைப் பூச்சிகளை போன்று புரோஹிதத்தின் பெயரால் நமது உதிரத்தை உறுஞ்சும் புரோஹிதர்களை ஒழித்தவர்கள் யார்? குருக்கள் கூட்டத்தாரின் குலங்களை வேரறுத்தவர்கள் யார்? கணக்கற்ற மதங்களையும் ஜாதிகளையும் ஆயிரக்கணக்கான ஆலயங்களையும் கோடிக்கணக்கான தெய்வங்களையும் ஒழித்தவர்கள் யார்? எழை பணக்காரன் என்ற வித்தியாசங்களை ஒழித்தவர்கள் யார்? ஐம்பது ஆண்டுக்குள் துருக்கியையும், ஜப்பானையும் முன்னேற்றத்திற்கு கொண்டுவந்தது யார்? ஜர்மன இத்தாலியா, எகிப்து, மங்கோலியா, சைபீரியா முதலிய தேசங்களில் முன்னணியில் நின்று உழைப்பவர்கள் யார்? அந்தந்த நாட்டின் கள்ளங்கபடு சூதுவாதற்ற இளைஞர்களல்லவா? இளைஞர்கள் எடுத்தகாரியம் தோல்வியுற்றதென எதேச சரித்திரத்திலாவது படித்திருக்கின்றோமா? இல்லை! இல்லை!! பெரியமனிதராகக்கூடிய வாலிபருடைய அகராதியில் 'தோல்வி' என்னும்பதம் கிடையவே கிடையாதெனலிட்டன் என்னும் மேல் நாட்டு அறிஞர் கூறியது முற்றிலும் உண்மை! உண்மை!!

மேல் நாட்டு இளைஞர்கள் நம்மை நோக்கி "இந்திய இளைஞர்கள் தன்னுரிமையற்று மிருகங்களைவிட கேவலமாக வாழுகின்றார்கள். மலம் தின்னும் நாயும் பன்றியும் செல்லுமிடங்களுக்கு வைதீகர்கள் மறுப்பதை சகித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வேகத்தை பார்த்தால் கண் ணைக்கூசுகின்றது, காதால் கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊத்தியும் நெஞ்சால் நினைத்தால் நெஞ்சை பிளந்தும் விடுவார்களாம். பால்குடிக்கும் பச்சை குழந்தைகள் தான் விவாகம் செய்ய வேண்டியு தம்பதிகளாம். புருஷன் இறந்தால் மனைவியும் உடன் கட்டை ஏறிவிட வேண்டுமாம். பெண்களுக்குச் சொத்துரிமை கல்வி கலப்புமணம் மறுமணம் விவாஹ ரத்து முதலிய பேச்சே பேசக் கூடாதாம். ஆங்கிலேயர்கள் ஆள ஆரம்பித்தபிறகு தான் ஆரியர்களின் அட்டகாசங்கள் குறைந்து வருகின்றதெனினும் அந்நாட்டி(இந்தியா)ல் இளைஞர்களின் அயர்ந்த நித்திரையினாலும், அறிவீனத்தினாலும், முயற்சியின்மையினாலுமே அவ ஆரிய)ர்களின் அட்டகாசங்கள் அறவே ஒழியாமலிருக்கின்றன" என்று வசை மொழி கூறுவதை வெட்கமின்றி செவிகொடுத்து கேட்கவா இந்த இந்திய நாட்டில் பிறந்தோம். நாமும் மேல்நாட்டு இளைஞர்களை நோக்கி உங்களை போலவே நாங்களும் இந்தியாவில் தன்னுரிமையுடன் மனிதர்களைப் போன்று சுதந்திரத்துடன் வாழுகின்றோம் எனக்கூறும்வரை போராடுவோமா.

இளைஞர்கள்தான் சுதந்திரத்திற்கு போராடத் தகுதியுள்ளவர்கள், ஏனெனில் அவர்களிடம் அச்சம், அடிமைத்தனம், சோம்பல், தூக்கம் என்னும் வியாதிகள் அணுகா. ஊக்கம், உற்சாகம், தியாகம், சுதந்தர தாகம் முதலியன இளைஞர்கள் இரத்தத்தில் கலந்துநிற்கின்றன சுதந்தரத்திற்காக இந்திய பூமியில் இளைஞர்களின் இரத்தம் ஓழுகவேண்டும். இளைஞர்கள் இரத்த ஆற்றினைக் கண்டு அஞ்சுபவர்களன்று இளைஞர்கள் மனம் இரும்புபோன்று உறுதியுடையது. இளைஞர்களின் ஊக்கத்தாலும் உற்சாகத்தாலும், அஞ்சா நெஞ்சத்தாலும் அருந்தியாகத்தினாலுமே இந்த நாடு முன்னேற்றமடைய முடியும். இளைஞர்களின் வீர உணர்ச்சிக்குத்தான் வைதீகர்கள் பூனையைக் கண்ட எலிபோல் நடுநடுங்குவார்கள். உலக வாலிபர்கள் ஊதும் சுதந்தாச் சங்கின் ஒலி கேட்டும் கோளாதசெவிடர்களைப் போன்று நித்திரையிலிருப்பது நீதியா? வருங்காலவாழ்க்கைநம்மு (இளைஞர்களு) டையது அதை சீர்திருத்த வேண்டியது எமது கடமையல்லவா? "இயலாது" என்பது என் அகராதியில் இல்லையென இளஞ்சிங்கம் நெப்போலியன் அன்று கூறியதை ஆராய்ந்து பாருங்கள். இளைஞர்களால் இயலாத காரியம் இக்தரணியில் இல்லவேயில்லை. வயது முதிர்ந்து, கண்பார்வையற்று, தலைமயிர் நரைத்து, எலும்புந்தோலுமாய் நாளை நம்மைவிட்டு பிரியும் வயோதிகர்களை நம்புவதில் பிரயோஜனமில்லை. அவர்கள்காலம் சென்றுவிட்டது. அவ (வயோதிக)ர்களை நம்பினுல் உலகத்தின் முன்னுல் தோல்வி அடைவது திண்ணம்! திண்ணம்!

விடுதலையும் முன்னேற்றமும் மடைந்திருக்கும் எந்தநாட்டின்சரித்திரத்தைப்புரட்டிப் பார்த்தாலும் அந்தந்த நாட்டின் வாலிபர்களுடைய உழைப்பினுலேயே சுதந்திரத்தை பெற்றிருக்கின்றதென்பது நன்கு விளங்கும் இளைஞர்கள் தான் எடுத்த காரியத்தை ஓரே நோக்கத்துடன் உலகம் புகழுமாறு வெற்றிவரை போராடுவதோடு கடவுளுக்குப, கடவுள பகதர்களுக்கும், மதத்திர்க்கும் மத கர்தர்களுக்கும் ஆழ்வார்களுக்கும், நாயன்மார்களுக்கும் அஞ்சாதவீரர்கள் உலகமுழுவதும் கையில் கத்தியுடன் உங்களுக்கு விரோதமாய் நின்றாலும் அப்பொழுதும் நீங்கள் உண்மையென கருதியதை செய்யதைரியப்படுவீர்களா? என சுவாமி விவேகானந்தர் வினவியது இன்னும் நமது செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

இதுகாறும் இதிகாச, புராண, சாஸ்திரம், மூடநம்பிக்கை, குருட்டுப்பழக்கவழக்கம், முன்னோர்கள் சென்ற வழி, என்னும் இருளில் நித்திரை செய்துகொண்டிருந்தோம். தன்னுரிமை என்னும் சுயமரியாதை இயக்க சூரியன் உதித்துவிட்டான். அவன் "இந்திய இளைஞர்களே! இன்னும் நித்திரையா? விடிந்து வெகு நேரமாய்விட்டது. எழுந்திருங்கள் எழுந்து கண்ணை துடைத்து விட்டு உலகத்தை உற்று நோக்குங்கள். கொஞ்ச நேரத்தில் எல்லா தேசங்களும் முன்னேறி விட்டன. சைனு இளைஞர்கள் சமதர்ம கொள்கையைப்பரப்ப ஆரம்பித்துவிட்டார்கள். உங்கள் தேசம்தான் கீழ்நிலையிலிருக்கின்றது. முன்னேற்றத்திற்காக வெற்றிகிடைக்கும் வரை போராடுங்கள்.

இளைஞர்களே! உண்பதும் உறங்குவதும், சீட்டாடுவதும், சினிமா பார்ப்பதுமான வீண்காரியங்களில் உங்கள் இளமை பருவத்தை கழிக்காதீர்கள். சென்ற காலம் திரும்பிவரப்போவதில்லை. தேசம் இளைஞர்களின் தியாகத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றது. சுயமரியாதை இயக்கதலைவர் இளைஞர்களையே நம்பிக்கொண்டிருக்கின்றார். அதற்கு துரோகம் செய்யமாட்டோமென சபதம் எடுங்கள். வருங்கால இன்னல்களை எண்ணி வருந்தாதீர்கள். மதமென்னும் கோட்டையை உடைத்து ஜாதியென்னும் சாமான்களை தியாகமென்னும் நெருப்புக்கிறையாக்குவோ மென மார்தட்டி வீரசிங்கங்களைப் போன்று வெளிவாருங்கள்.

நம்மை உற்றார் உறவினர்கள் தேசத்துரோகி, மதத்துரோகி கடவுள் துரோகி என நிந்திக்கலாம். அவைகளை பொருட்படுத்தாதுஒன்றுக்கும் அஞ்சோம்! அஞ்சோம்!! எனக் கூறுங்கள். அச்சமில்லை! அச்சமில்லை!! அச்சமென்பதில்லை!!! இச்சகத்தோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்.....உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்.....என சுப்பிரமணிய பாரதி அன்று பாடியது நம்போன்ற வீர இளைஞர்களுக்கல்லவா?

வருணச்சிரம தர்மத்தின் தலைவரும் ராமராஜியத்தின்காரியதரிசியுமான திரு. காந்தி 1929 டிசம்பர் இறுதியில் கூடிய லாகூர் ஆதிதராவிடர் மகாநாட்டில் உங்களுக்கு வேண்டுமானால் வேறு ஆலயங்கள் கட்டிக்கொள்ளுங்களென (பசிக்குணவு கேட்டவனுக்கு பாஷாங்கல்லை தூக்கி கொடுத்தது போல்) கூறியதும் அதே பாடத்தை சென்னை ஆதிதிராவிடர் பொது சபையில் ஒரு பண்டிதர் ஓப்பித்தது போன்று நீங் (வைதீகர்) களும் கூறலாமென ஆலோசித்துக்கொண்டிருக்கின்றீர்களா? இந்தியாவில் இது போழ்திருக்கும் ஆலயங்கள் காணுதா? எனக் கேட்கின்றேன். இப்பொழுதிருக்கும் கோடிக்கணக்கான ஆலயங்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

சமஸ்கிருத சனியன்.

(தேசீயத்துரோகி)

தேசீயத் துரோகியாகிய நாம் கூறும் விஷயங்கள் முழுவதும், எழுதும் சங்கதிகள் எல்லாம், மக்களுக்குப் பயன்படாத பழய காரியங்களில் ஆசையுடையவர்களுக்கு வெறுப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதைப்பற்றி — அதாவது எவருடையவெறுப்பைபற்றியும்எதிர்ப்பைப்பற்றியும் நாம் கவலைப்படுவது கிடையாது, ஆகவே இப்பொழுது ஒரு தேசீயத்தைக் கண்டிக்கவே இந்த முகவுரையைக்கூறிக்கொண்டு முன் வந்தோம்.

சென்னை மாகாணத்தில் கல்வி யிலாக்காவில் சிக்கனம் செய்வதைப்பற்றி ஆலோசனை கூறிய சிக்கனக்கமிட்டியார் கூறியிருக்கும் யோசனைகளில் 'சென்னைப் பிரசிடென்சிக்கல்லூரியில் உள்ள சமஸ்கிருத ஆனர்ஸ் வகுப்பை எடுத்துவிடவேண்டும்' என்பதும் ஒருயோசனையாகும்.

உண்மையிலேயே 'தேச மக்கள் கல்வியினால் அறிவு பெற வேண்டும்; கல்வியினால் பகுத்தறிவு பெறவேண்டும்' என்று விரும்புகின்றவர்கள் சமஸ்கிருதக்கல்வியை எடுத்து விடுவதைப் பற்றிக்கொஞ்சமும் கவலையோ, வருத்தமோ அடையமாட்டார்கள். ஏனெனில் இன்று இந்து மதம் என்று சொல்லும் ஒரு கொடுமையான மதம் இருப்பதற்கும், இந்த இந்து மதத்திலிருந்து பிறந்த ஜாதிக்கொடுமை, சடங்குக்கொள்ளை, கடவுள் மூட்டாள்தனம் ஆகியவைகள் கற்றவர்கள் கூட்டத்திலும், கல்லாதவர்கள் கூட்டத்திலும், தலைவிரித்தாடி அவர்கள் உழைப்பையும், அறிவையும், சுதந்தரத்தையும் கொள்ளை கொண்டிருப்பதற்கும் காரணம் சமஸ்கிருதமேயாகும். இன்று வருணாச்சிரம தருமக்காரர்கள் சனாதன தருமம் காப்பாற்றப்படவேண்டும் என்று சொல்லுவதற்கும், சுயராஜ்யத்தைவிட சனாதன தருமமும் வருணாச்சிரமதருமமும் காப்பாற்றப்படுவதே முக்கியமானதென்று சொல்லுவதற்கும் சமஸ்கிருத பாஷைப்படிப்பும் அதில் உள்ள நூல்களுமே காரணமாகும். தீண்டாத்தகாதவர்களைத்தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் செல்லக்கூடாது; குளத்தில் குளிக்கக்கூடாது; பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கக்கூடாது; என்று சொல்லுவதற்கும் காரணம் சமஸ்கிருத நூல்களேயாகும். சனாதன சட்டம்போன்ற சீர்திருத்த சட்டங்களைச் செய்யக்கூடாது என்றுசொல்லுவதற்கும், பொட்டுக்கட்டுவதைத்தடுக்கும் சட்டம், பிராஜா உற்பத்தியைக்கட்டுப்படுத்துவதற்கு உதவியளிக்கும் சட்டம், பெண்களின் சொத்துரிமைச்சட்டம், விவாக விடுதலைச்சட்டம் முதலியவைகளை மதவிரோதமானவைகள் என்று கூறித்தடுப்பதற்கும், திரு. சிவராஜ் பி. ஏ; பி. எல்., எம். எல். சி. அவர்களை எங்கும் எதையும் இன்னும் பார்ப்பனர்அல்லாதார் கூடியசென்னை கால்மாபாலிட்டன் கிளப்பில் அங்கத்தினராகச்சேர்த்துக்கொள்ள மறுத்ததற்கும் காரணமாயிருப்பவை சமஸ்கிருத நூல்களேயாகும். சீர்திருத்தத்திற்கு விரோதமாகக்கிளர்ச்சிசெய்து குதித்துக்கொண்டு தொண்டை வீங்குகின்ற வருணாச்சிரமக்கூட்டத்தார்கள் எல்லோரும் தங்கள் கொள்கைகளுக்குச் சமஸ்கிருத, வேத, புராண, இதிகாச, ஸ்மிருதிகளையேபிரமாணங்களாகக்காட்டுகின்றனர். அவை என்ன சொல்லுகின்றனவென்று ஆவனிக்கின்றார்களே ஒழிய தங்கள் அறிவு என்ன சொல்லுகின்றது? உலகப்போக்கு என்ன சொல்லுகின்றது? என்று கொஞ்சம்கூட ஆவனிக்கின்றார்களில்லை. இவ்வாறு ஆவனிக்கக்கூடிய அறிவு அவர்களிடம் இல்லாதபடி அவர்கள் மூளையை அந்த சமஸ்கிருதப் பழங்குப்பைகளாகிய சாஸ்திரங்கள் என்பன உறிஞ்சிவிட்டன. ஆகையால் இனி வரும்கால இளைஞர்களின் நல்ல தூய்மையான மூளைகளிலாவது கோளாறு ஏற்படாமலிருக்கவேண்டுமானால்— அவர்களிடம் மூடநம்பிக்கைகளும், சுயநலமும் உண்டாகாமல் பகுத்தறிவும், சமதர்ம நோக்கமும் உண்டாகவேண்டுமானால் சமஸ்கிருதக்கல்வியை அடியோடு ஒழிக்கவேண்டியதே முறையாகும்.

ஆனால் நமது நாட்டில் உள்ள சமஸ்கிருதப்புராணக்குப்பைகளாலும், அவைகளைப்பார்த்துச் செய்த தமிழ்ப்புராணக் கூளங்களாலும், குடிகொண்டிருக்கும் மூடநம்பிக்கைகள் போதாதென்று தேசீய ஆடைகளைப்புனைந்து 'ஹிந்தி' என்னும் பாஷையையும் கொண்டுவந்து நுழைத்துக்கொண்டு பார்ப்பனர்கள் நம் மக்களை ஏமாற்றுகிறார்கள். ஹிந்தியைப்பரப்புவதற்காகப் பார்ப்பனர் பிரயாசைப்படுவதற்குக்காரணம் அதன் மூலம் மீண்டும் வருணாச்சிரம தருமத்தையும், புராண நம்பிக்கை, மதநம்பிக்கை, பிராமண பக்தி, சடங்குபக்தி முதலியவைகளை விருத்தி செய்து தங்கள் பழய ஜாரவத்தையும், ஏமாற்றுவயிற்றுப்பிழைப்பையும் புதுப்பித்துக்கொள்ளலாம் என்பதற்காகவே என்பது சுயமரியாதைக்காரர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. ஆகையால் இத்தகைய பார்ப்பனர்கள் இந்த ஹிந்தி பாஷை முதலானவைகளுக்கெல்லாம் அதிப்படையாக இருக்கும். சமஸ்கிருதத்தைக் கைவிடச்சம்மதிப்பார்களா? ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்.

ஆகையால்தான் பார்ப்பனர்கள் ஊருக்கு ஊர் கூட்டங்கூடி சென்னை அரசாங்கச் சிக்கனக்கமிட்டியர் பிரசிடென்சி கல்லூரியில் உள்ள சமஸ்கிருத ஆனர்ஸ் வகுப்பை எடுக்குட்படி சிபார்சு செய்ததைக்கண்டிக்கிறார்கள். பொருளாதார நிலைமையைப்பற்றிய கவலையும் அவர்களுக்கில்லை. எந்தப்பொருளாதாரம் எக்கேடு கெட்டாலும் தங்கள் சுயநலத்திற்குத்துணை செய்கின்ற மதமும் அதற்குச் சாதகமாயிருப்பவைகளும் காப்பாற்றப்படவேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக இருந்து வருகின்றது. கப்பிக்கிளப்புப் பார்ப்பான், உத்தியோகப்பார்ப்பான், அகிடல் பார்ப்பான், சட்டமறுப்புச்செய்து ஜெயிலுக்குப்போகும் பார்ப்பான் உள்பட எல்லோரும் இக்கொள்கையைக் கைவிடாமலே வைத்துக்கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் இச்சமயத்தில் நாமும் கிளர்ச்சி செய்யவேண்டும். பார்ப்பனர்களின் வெறுங்கூச்சல்களுக்குப்பயந்து கொண்டு அரசாங்கத்தார் சிக்கனக்கமிட்டியின் சிபார்சைக்கைவிட்டு விடக்கூடாதென எச்சரிக்கை செய்யவேண்டும். சில பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கங்களிலும், சுயமரியாதைச்சங்கங்களிலும், சிக்கனக்கமிட்டியின் யோசனையைப்பாராட்டியும் இன்னும் சமஸ்கிருத கல்விக்காகக்கொடுக்கும் உபகாரத்தொகையை நிறுத்தும்படியும் தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறே நாடெங்கும் பல தீர்மானங்கள் செய்து அரசாங்கத்தாரை எச்சரிக்கைசெய்யவேண்டும். அப்பொழுதுதான் சமஸ்கிருதச்சனியன் ஒழியும்.

மதிப்புரைகள்.

பாண்டியதேச ஆதித்த வம்ச சரித்திரம்.

இது பாளையங்கோட்டை, செயிண்ட் ஜான்ஸ் காலேஜ் தலைமைத்தமிழாசிரியர் பண்டித. தா. மாசிலாமணி நாடார் அவர்களால் எழுதப்பட்டது. இந்நூலில் காயாமொழி என்னும் ஊரில் உள்ள ஆதித்தகுல நாடார்களின் பழய சரிதம் சொல்லப்படுகிறது. அவர்கள் சோழவம்சத்தைச்சேர்ந்தவர்கள் என்பதையும், சிற்றரசராக வாழ்ந்தவர்கள் என்பதையும் தக்க ஆதாரங்களைக்கொண்டு விளக்கி எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. ஒரு புத்தகம் வேண்டுவோர் 8 அணா முத்திரை அனுப்பவேண்டும்.

விலாசம்:—

ரா. சோமசுந்தரம்,
ஜெயராமவிலாஸ்
காயாமொழி
திருநெல்வேலி ஜில்லா.

சா.சி

வேங்கடபதி தேவமகாராஜன்.

இது திரு. டி. சிவசங்கரன் அவர்களால் தெலுங்கில் எழுதப்பட்டதை திரு. வி. ஏ. சுப்பிரமணியம் அவர்களால் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டதாகும் இப்புத்தகத்தில் சந்திரகிரியில் இருந்து விஜயநகர ராஜ்யத்தை ஆண்ட வெங்கடபதிதேவமகாராஜாவின் சரித்திரமும், அவருடைய அரசாட்சியின் மேன்மைகளும் சொல்லப்படுகின்றது. விஜயநகரராஜ்யம் அதன் பூர்வீக தலைநகராகிய பெனுகொண்டாவின் சரிதை, ஞாபகச்சின்னங்கள் ஆகியவைகளை இப்புத்தகத்தில் காணலாம். சரித்திரங்கற்போர்க்கு இப்புத்தகம் உதவியாகயிருக்கும். 58 பக்கம் உள்ள இப்புத்தகத்தின் விலை அணா 12.

விலாசம்:—

ஆனந்தபோதினி அச்சுக்கூடம்
சென்னை,

சா.சி

வி க் ர க ம் .

ஹரீந்தரநாத் சட்டோபாத்யாயா எழுதியது.

(நாகலிங்கம்—மொழிபெயர்ப்பாளர்)

மீண்டும் ஏழைகள்:- சதா துன்பம்! ஆண்டவனே பேசக்கூடாதா? நாங்கள்—ஏழைகளாகிய நாங்கள்—ஆதரவற்ற நாங்கள்—பசியால் மடிகின்ற நாங்கள், சதாகாலமும் என் துன்பத்திலும், கஷ்டத்திலும் அழுந்திச் தவிக்கவேண்டும். நாங்கள் வாய் திறந்து பேசக்கூடாதா. ஆம் நாங்கள் அருகதையற்றவர்கள்? எல்லாம் தங்கள் சித்தம்.

ஆண்டவனே! எங்கள் ஆண்டவனே! நாங்கள் எதையும் சகித்துக்கொள்வோம். ஆனால் ஓ கடவுளே! எங்கள் குழந்தைகள் பசிப்பிணியால் மடிகின்றன. கொடுமை! அந்தோ கொடுமை! என்றென்றும் துன்பம்—எக்காலமும் தீப்பற்றிக்கொண்டால் எங்கள் குடிசைகளே அதி விரைவில் பற்றிக்கொள்கின்றன. காலரா மூதலிய தொத்து நோய்களால் எங்களில் அநேகர் ஈக்களைப்போல் மடிந்து விடுகின்றனர். மழை வந்தால் எங்கள் குடிசைகள் ஒழுகுகின்றன. எங்கள் குழந்தை குட்டிகளெல்லாம் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் எங்கள் குடிசைகளையெல்லாம் கங்காதேவி கபளீகரணம் செய்து விடுகிறாள். அன்பான ஆண்டவனே! தங்களைத்திருப்திபடுத்துகிறோம். எங்களைக்காப்பாற்றும் காப்பாற்றும் (விக்கிரகத்தின் பின்புறம் தங்க நாணயங்கள் விழுகின்ற சப்தம் கேட்கின்றது)

இன்னும் எவ்வளவு காலம்கஷ்டப்படுவது. நாங்கள் கஷ்டம் அநுபவிக்கவேண்டியது எங்கள் 'தலைவிதி' அறிவாளிகள் நாங்கள் கஷ்டப்படத்தான் வேண்டுமென்கிறார்கள். எங்கள் தலைவர்களும் அவ்விதமே கூறுகிறார்கள். மூன்ஜென்மத்தில் செய்த வினையை இப்போது அநுபவிக்கிறோமென்கின்றார்கள். அது எங்கள் கர்மவினை என்கிறார்கள். அதையே அடிக்கடி சொல்லி வற்புறுத்துகிறார்கள். நல்ல வீடுகளில் உணக்காசர்களாய் சௌகரியமாய் வசித்துவருபவர்கள் வண்டிவண்டியாய் தானியங்கள் வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன்ஜென்மத்தில் நல்லகாரியங்கள் செய்திருக்கவேண்டும். அந்த விதம் சொல்லியே எங்களை நம்பச்செய்கிறார்கள். நாங்களும் நம்புகிறோம். இந்த ஜென்மத்தில் அவர்கள் என்ன காரியமும் செய்வதைக்காணோம். எண்ணேக காரியங்கள் செய்கிறார்கள். நல்லகாரியங்களா? செலவாண்கள் கெட்ட செய்கைகள் செய்வார்களா? அவர்களிடமுள்ள தானியத்தில் எங்களுக்கு கொஞ்சம், கொஞ்சம் பகிர்ந்து கொடுத்தால் அது நன்மையான காரியமாகாதா? கட்டாயம் செய்வார்கள், கடவுள் சம்மதமிருந்தால். எல்லாம் அவர்விருப்பப்படிதானே நடக்கும். வறியராகிய நமக்கு அவருடைய சித்தம் மிகவும் கொடுமையான, சகிக்கமுடியாததுன்பத்தோடு கூடிய உருக்கக்கூடிய கஷ்டத்தோற்றத்தோடுவருகிறது. அவரது சோனையெலலாம அவரது சித்தம்-நமமீது செலுத்தும சித்தத்தின் தோற்றமென்ன? காலரா, பிளேக நெருப்பு, வெள்ளம, பஞ்சம் முதலிய இந்த தோற்றத்தோடேயே நமமை ஆசீர்வதிக்கிறார். இவைமட்டுமா? வரிப்பழு, அதிக வேலை, தூசி, உஷ்ணம், கல்லுடைத்தல, பாரமான சுமைகளை தூக்கல், வியர்வை, களைபபு, அபராதம, எஜமானனின் கடுங்கோபம்; வசவு தண்டனை இதுபோன்றன. ஆனால் சிலருக்கு வேறுவிதமாய் தோற்றமளிக்கிறார். நலலகாற்று, சுவையான உணவு, பெரிய வீடுகள், படடுமெத்தைகள், பிரகாசமான விளகுகள், சிரிப்பு, சந்தோஷம் இவை முதலியன, அவருடைய சித்தத்தை ஏற்று நாம் அநுபவிக்கவேண்டியதுதான். அவ்விதமே நாம போதிக்கபபட்டு வருகிறோம். ஒரு சிலர் ஏனையோர்க்கு இதை போதிக்கிறார்கள். எலலோரும அந்த ஒரு சிலரது சித்தபபடி அடங்கி நடககவேண்டும. எனினில் அது ஒரு சிலரது சித்தமாகடவுளது சித்தமாகும். சாப்பாற்றும்! எங்களைக்காப்பாற்றும்!!

(அக்கோவிலின் மற்றொரு பக்கம் நடைபெறும் ஒரு செல்வந்தர் விவாகம்—அங்கு நடக்கும் நடன சத்தம், கைகள் கொட்டும் சத்தம்.)

பசி.....பசி.....எப்படிச் சுடுகிறது பிள்ளை பெற்ற வருக்குத்தெரியும் பிரசவவேதனை என்பதுபோல பசியை அநுபவித்தவர்களுக்கே அதன் வேதனை தெரியும். ஒரு சிலருக்கு அது தெரியவேதெரியாது ஏனையோருக்கு அது தெரியும் அதிக காலமாகத்தெரியும் பசியென்ற நெருப்பு வயிற்றைச்சுடுகிறது.

ஓ ஆண்டவனே ஒரு கை பிடி தானியமேவேண்டும் அதற்காகவே தங்களைவணங்குகிறோம்.

எங்களது பெண்களின் கண்ணீர் தங்களைக்கறைப்படுத்தில்லையா? எங்களது குழந்தைகளின் சோர்ந்த கண்கள் தங்கள் மனதை சார்ப்பதிலையா? ரத்தமின்றிய யுவர்களது உடல் தங்களை அழைப்பதில்லையா? உழைத்து ஓடிந்து போன அவர்களது சரீரம் தங்களது பெருமையை குறைப்பதிலையா? லட்சக்கணக்கானவர்கள் தாங்கள் தங்கள் சுயமரியாதை இழந்து மிருகங்களாகிக்கொண்டிருக்க தங்கள் சுயமரியாதையை நிலைநாட்ட இயலுமா? வஞ்சங்களெல்லாம் புண்ணியமானவை யென்று அந்த ஒரு சிலர் சொல்லுகிறார்கள், கையால் அவர் கொடுக்கிற கஷ்டங்களுக்காகநாம் அவருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்; அதோ அவர்கள் வருகிறார்கள்; மோட்ச வீட்டின் திறவுகோல் அவர்களிடமே இருக்கிறது. அவர்கள் மிகுந்த அறிவாளிகள். (வழக்கமபோல் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு பிராமண புரோகிதர்கள் உள்ளே வருகிறார்கள்)

ஏழை மக்கள்:- காப்பாற்றுங்கள்! எங்களைக் காப்பாற்றுங்கள்!

புரோகிதர்கள்:- இதென்ன ஒப்பாரி வைக்கிறீர்கள். நீங்களெல்லாம் என்ன மிருகங்களா? நிமமதியான இந்த இடத்தை அசுததம் செய்கிறீர்கள். (விக்கிரகத்தை சுட்டிகாட்டி) அதோ பாருங்கள், என்ன மௌனமாய், சாந்தமே உருக்கொண்டு விளங்குகிறார் அவர்.

ஜனங்கள்:- ஆண்டவனின் கோபத்தை சாந்தப் படுத்தவே நாங்கள் வந்திருக்கிறோம். அவ

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

இடம்—கோயில்.
பாத்திரங்கள்—புரோகிதர்கள்.
ஏழை மக்கள்—சாது.

ஆண், பெண், குழந்தைகள் முறையிடு:—

பஞ்சம்! பஞ்சம்!! மௌனம் சாதிக்கும் கடவுளே தங்களை வணங்குகிறோம். எங்களைக்காப்பாற்றும், காப்பாற்றும். சதாகாலமும் தங்களையே தொழுகிறோம். ஆனால் தாங்கள் செவி சாய்ப்பதில்லை. அதுவும் எங்கள் நன்மைக்கே என்று நம்பும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறோம். அவ்வாறே நாங்களும் நம்புகிறோம். நாங்கள் எப்பொழுதும் நம்புகிறவர்கள். யார் எதைச்சொன்னாலும் நம்புகிறோம்.

எங்களைக்காப்பாற்றும்! கடவுளேகாப்பாற்றும்! நாங்கள்—ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்படுபவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், உணவற்றவர்கள், சத்தமற்றவர்கள்; குப்பை மேடுகளிலும், அழுக்குமூலைகளிலும், குடிசைகளிலும் ஆடுமாடுகளைப்போல் சதா 'துன்பம்' என்னும் கருவிலேயே வளர்ந்து வருபவர்கள். ஆதரவற்றவர்கள். ஏனைய ஜனங்களால் வெறுத்து ஒதுக்கித்தள்ளப்பட்ட, பசிப்பிணியால் வாடி வதங்கும் ஜனங்கள். எங்களைக்காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்! (அழுவருப்பும், அலட்சியமும் நிறைந்த ஒரு சிரிப்பு விக்கிரகத்தின் பின் புறமிருந்து கேட்கிறது)

மீண்டும் ஏழை மக்கள்:- எங்கள் நெஞ்சுலர்ந்திருக்கிறது. எங்கள் குழந்தைகளின் உதடுகளெல்லாம் காய்ந்திருக்கின்றன. இன்னும் சில இறந்து கொண்டிருக்கின்றன. எங்களுடைய குடிசைகளில் தானியமே கிடையாது, ஆனால் ஒரு சிலருடைய களஞ்சியங்களில் தானியங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்கள் விலைக்கு வாங்கி சேமித்துவைத்திருக்கிறார்கள். எங்களால் விலைக்கு வாங்க முடியாது; விலைகள் உயர்ந்து விட்டன. அந்தோ கஷ்டம் நாங்கள் என் செய்வோம்? எங்கள் கையில் காசில்லை இதோ தங்களுக்கு புஷ்பங்கள் கொண்டுவந்திருக்கிறோம்.

மற்றவர்:- நான் வெறுங் கையோடு தான் வந்திருக்கிறேன்.

ஒரு பெண்:- இதோ நான் தேங்காய் கொண்டு வந்திருக்கிறேன். என் கையிலிருந்த காய்பை விற்றுத் தேங்காய் வாங்கினேன்.

ஜாதி யொழிவுக்குக் கலப்பு மணம் ஓர் மார்க்கம்.

தோழர் மு. சிங்காரவேலு,
B. A B. L.

இன்று நமக்குக் கிடைத்த "குடி அரசில்" (ஜனவரி மாதம் 3-ம தேதி) பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறது. "ஆனால், தோழர் சிங்காரவேலு அவர்கள் தமது பிரசங்கத்தில், "நமது தேசத்தில் ஜாதி, கலப்பு மணத்தால் ஒழியும் என்று சிலர் கருதுகின்றார்கள் ஆனால் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் தனிப்பட்ட ஒரு ஜாதியாராகின்றார்கள் இந்த விதங்களில் இன்னும் ஜாதிகள் வளர்ந்து வருகின்றன என்று கூறியிருப்பதை நாம் ஒப்புக் கொள்ள முடியவில்லை."

பத்திராதிபர் நான் கூறியுள்ள விஷயங்களைக்கொண்டு, கலப்புமணம் செய்துகொள்வது அனுசரிக்கத்தக்கதல்ல என்றுதான் நாம் அபிப்பிராயப்பட்டதாக, யூகித்துக்கொண்டதினாலேயே, அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். சென்னையில், முதல் முதலில், 1889 ம் வருஷத்தில், கலப்பு மணத்தைப்பகிரங்கமாக ஆதரித்து, செய்து கொண்டவன் நான் ஒருவன். எங்கள் பட்டிணவ ஜாதியில், பிரிவு உண்டாய் இருந்ததை, ஒன்று படுத்தவே எனது கலப்பு மணம் செய்யப்பட்டது. அந்தக் கல்யாணம் நடந்து 43 வருஷமாயும், எங்கள் ஜாதி வித்தியாசம் போனதாகத் தோன்றவில்லை. அது முதல் இன்று வரை பட்டிணவர்களில், இரண்டொரு கலப்பு கல்யாணம் தான் நடந்து இருக்கின்றது. இது ஒரு விஷயம். இன்னுஞ் சில கலப்பு கல்யாணங்களும் நடந்திருக்கின்றன. வேறு ஜாதிகளில், ஆனால் அவைகள் ஏகதேசமாகவே இருந்து வருகின்றன. இதனால் என்ன ஸ்தாபிக்கப்படுகின்றது என்றால், நமது நாட்டில் ஜாதியைப் போக்குவது லேசானதல்ல. இதை குறிப்பிக்கத்தான் நாம் அவ்விதம் வரைந்தோம். கலப்புக் கல்யாணம் அவசியமில்லை என்றல்ல. கூடாதென்று மல்ல, கலப்புக் கல்யாணம் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்காக நமது நாட்டில் நடக்க வேண்டுமென்பதே நமது நோக்கம். கலப்பு மணம் செய்வதற்குத் தடையாயுள்ளவை, ஜாதிவேண்டாமென்று சொல்லுவோருடைய கோழைத்தனமும், அவர்களுடைய நாணயமின்மையுமே. ஜாதி சிர்திருத்தக் காரர்களில் பெரும்பான்மையோர், வாயளவிலே நிறுத்தின்றார்களே யொழிய, செய்கையில் காட்ட பயப்படுகின்றார்கள். புத்தர் காலமுதல், நானறு வரை ஜாதியைக் கண்டித்து வந்தவர் பலரே. மதஸ்தாபகரும், தத்துவ ஞானிகளும், சீர்திருத்தக் காரர்களும் கடந்த 3000 வருஷங்களாக மதத்தையும், அதன் பிறந்த ஜாதியையும், கண்டித்து வந்திருக்கின்றார்கள். ஆனால் நமது துர்ப்பாக்கிய நாட்டில், ஜாதியும் மதமும் வலுத்து வருகின்றனவேயொழிய, குறைந்த பாடில்லை. பத்து வருஷத்துக்கு ஒரு முறை வெளியாகும் லெண்ஸஸ் (Census) ரிப்போர்டில், ஜாதி அதிகரித்தே வருகிறது. நமக்குத் தெரிந்த காலத்திலேயே, இரண்டு புதிய மதங்கள் ஆர்ய சமாஜம், பிரம்ம சமாஜம், தோன்றின. சாமதிருவண்ணாமதமும், பிர்மக்கியான மதமும், (Theosophy) சேர்த்தால், நான்கு புதிய மதங்கள், கடந்த 100 வருஷத்தில் தோன்றின என்று கூறலாம். நமது நாடு மதங்களுக்கும், ஜாதிகளுக்கும் பிறப்பிடமாகவே இருந்து வருகின்றது. மதங்களும், ஜாதிகளும், வலுத்து வரும் நாடு, இதொன்றே. ஆதலின் கலப்புக் கல்யாணம், ஏக தேசமாகச் செய்துக் கொள்ளுதல் போதாதென்பதே நமது கருத்து. ஜாதியையும், மதத்தையும் ஆதரித்து வரும் அரசியல் இந்த நாட்டில் அரசு புரியும் வரை ஜாதியும் ஒழியாது, மதமும் ஒழியாது எனபதே நமது பூரணத்துணிபுமாகும் ஆயிரம் வருஷங்களாக ஜாதியில்லா மகமதியர் நமது நாட்டை ஆண்டும 200 வருஷமாக ஆங்கிலேயர் நமதுநாட்டில் வந்து கைப்பற்றியும், இன்றுவரை ஆண்டுவந்தும், ஜாதியொழிய வில்லை. கடந்த 50 வருஷங்களாக சீர் திருத்தக்காரர்கள் ஜாதியை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டுவந்தும், ஜாதிக்கொடுமை குறைந்த பாடில்லை காங்கிரஸ் சென்ற 10 வருஷமாக, தீண்டாமை ஒழிய வேண்டுமென திட்டங்கள் போட்டும், எல்லாம் வாய்த்திட்டமாகவும், பேப்பர் திட்டமாகவுமே கிடக்கின்றன. நமது சுயமரியாதை இயக்கத்தினர் சென்ற 5 வருஷங்களாக, ஜாதியைக் கண்டித்தும், கலப்புக் கல்யாணங்களை ஆதரித்தும் வருகின்றனர். இந்த கல்யாணங்கள் பெரும்பான்மையையும் சிற்சில பெடி பூர்ஷுவா (Petty Bourgeois) என்று வகுக்கப்பட்டிருக்கும் அரை முதலாளி கூட்டங்களில் நடந்தேறுகின்றனவே யொழிய, பாமர ஜனங்களுக்குள் நடப்பது அபூர்வம். ஆதலின், வெறும் பிரசங்கங்களாலும், ஏகதேச கலப்பு கல்யாணங்களாலும், ஜாதி யொழியுமென்பது, நமது மனத்திருப்திக்கே யொழிய, வாஸ்தவமாக ஜாதிப் போக்கல்ல. நமது தீர்மான முடிவு என்னவெனில், நமது இந்திய நாட்டில், ஜாதி யொழியாதிருப்பதற்கு முக்கிய காரணம், ஜாதியைப் பராமுகமாய்ப் பார்த்து வரும் அரசுகளாலென அறிக. ஜாதியை ஆதரிக்கும் அரசுகள் எதுவாயினும், பிரிடிஷ் சாம்ராஜ்யமாய் இருந்தாலும் சரி, அல்லது, காந்தி சுயராஜ்யமாய் இருந்தாலும்சரி, அல்லது மிதவாதிகளின் டொமீனியன் (Dominion) ராஜ்யமாய் இருந்தாலும் சரி, அல்லது. ஜஸ்டிஸ் கட்சியின்கான்ஸ்டிடூஷனல் டிமாக்கிரஸியாய் (Constitutional Democracy) இருந்தாலும்சரி, அல்லது, வசந்தம்மையின் ஹோம்ரூலாய் (Home Rule) இருந்தாலும் சரி, நமது இந்திய நாட்டை விட்டு ஜாதி யொழியப்போவதில்லை. எப்பொழுது ஒழியுமென்றால், ஜாதியும் மதமும் அற்ற நமது சுயமரியாதையோர் கோரும், சமதர்ம ஆட்சி, பாமர மக்களுக்கு ஏற்பட்டால், அப்போது தான் நமது ஜாதி சொல்லாமலே ஒழிந்துவிடும். அந்நிலைமை வரும் வரை, பிரசங்கங்கள் மூலமாகவும், கலப்புமணங்கள் மூலமாகவும், அரசியல் திட்டங்கள் மூலமாகவும் சீர்திருத்தங்கள் மூலமாகவும், ஜாதியின் கடூரத்தைக் குறைக்கப் பாடுபட்டு வரவேண்டியதே அவசியமே. ஜாதியை, நமது நாட்டில் கண்டித்து ஒழிக்கப்பாடுபடும் கக்ஷிகள், சுயமரியாதையோரைத்தவிர வேறு யாருமில்லை. மற்ற கக்ஷிகள் யாவும் அரசியல் துறை சீர்திருத்தத்தில் இறங்கியிருக்கின்றன. சுயமரியாதையோர் சமதர்ம வாதிகளைப்போலவே சமூக சீர்திருத்தங்களை, இனிவரும் ஆட்சிக்கு, அடிப்படையாகக் கொண்டி உழைத்து வருகின்றார்கள். முதலாளிகளுக்கு பிரசாரம் செய்வதால்மாத்திரம்போதாது. முதலாளிகளில், கலப்புகல்யாணங்கள் மாத்திரம் போதாது, கிராமங்களில்வாழும் பாமர மக்களிடம் சென்று, அவர்களுடன் கூடி நமது சீர்திருத்தங்களை ஆணுக்கும் பெண்ணுக்கும் தெரிவிக்கவேண்டும். இதுதான் ஜாதியைபோக்கும் நேர்வழியெனநமக்குதோன்றுகின்றது.

குறிப்பு:—தோழர் சிங்காரவேலு அவர்கள் கலப்பு மணத்தை மனப்பூர்வமாய் ஆதரிக்கின்றவர் என்பதையும் கலப்புமணம் ஜாதியொழிப்புக்கு பலவழிகளில் ஒருவழி என்பதைஒப்புக்கொண்டவர் என்பதையும் அறிவோம். ஆனால் அவரது பிரசங்கத்தில் காணப்பட்ட வாக்கியங்கள் சாமான்ய மக்களுக்கு கலப்பு மணத்தைக்கண்டிப்பது போலக்காணப்பட்டமையால் நாம் அதைக் குறிப்பிட்டுத் தலையங்கத்தில் எழுதநேர்ந்ததைத்தவிர வேறில்லை. இக்கட்டுரையினால் தோழர் அவர்களின் உண்மையான கருத்தைத்தெளிவாக எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள் என்பது திண்ணம். (ப—ர்)

அகில இந்திய வர்ணாசிரம

சுயராஜ்யசங்கமகாநாடு.

அகில இந்தியவர்ணாசிரம சுயராஜ்யசங்கமகாநாடு கல்கத்தாவில்டிசம்பர் 27, 28, 29, தேதிகளில் பம்பாய் கோஸ்வாமி ஸ்ரீகோகுலநாத்ஜி மகாராஜ் தலைமையில்கூடைபெற்றது.

நீண்டாதாரும் இந்தமதத்தில்சேர்ந்தவர்கள் தானென ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்களே தம், புராணம், ஸ்மிருதி ஆயிவற்றைப் பின்பற்றுகிறவர்களென்றும், மற்றவர்கள் அவர்கள்மீது சகோதரவாஞ்சை செலுத்தி வருகின்றனரென்றும் மற்றொரு தீர்மானம்நிறை வேற்றப்பட்டது. சில சீர்திருத்தக்காரர்களால் அவர்கள் அலுவலியமாகக் கிளப்பிவிடப்பட்டது காரணமாக அவர்கள் வர்ணாசிரமதர்மிகட்கு விரோதிகளாய் விட்டதாக இன்னொரு தீர்மானம் தெரிவித்தது. அவர்களுடைய தவறான அபிப்பிராயத்தை யொழிப்பதற்காக உபதேசகர்கள் பலரைநாடெங்கும் அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

காஷிக்கலராம் ஆலயத்தையும், ராமகுண்ட தீர்த்தத்தையும் அசுத்தப்படுத்த முயற்சிசெய்பவர்களைக்கண்டித்தும்மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கஷ்டத்துடன் இவர்களைஎதிர்க்கும் சனாதனதர்மிகள் பாராட்டப்பட்டனர். தேவைப்படும்பண உதவியையும் ஏனைய உதவிகளையும் சங்கம் செய்யத்தயாராயிருப்பதாகவும் உறுதி செய்யப்பட்டது. நீண்டாத வகுப்புப்பிள்ளைகளுடன் வருணாசிரம தர்மிகளின் பிள்ளைகளும் சேர்ந்து பள்ளிக்கூடங்களில் படிக்கும்படிவற்புறுத்தும் பிரிட்டிஷ்கவர்ன்மெண்டினுடையவும், இந்தியசமஸ்தானங்களினுடையவும்போக்கைக்கண்டுவருத்தமுறுவதாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நீண்டாதாருக்கு முன்னிருந்தமாதிரி தனிப்பள்ளிக்கூடங்களைக்குமாறு செய்வார மகாராஜாவைக் கேட்டுக்கொள்வதாக ஓர்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நீண்டாதாரையும் சேர்க்கும்பள்ளிக்கூடங்களைபஹிஷ்கரித்ததற்காக துவாரகாஜனங்கள் பாராட்டப்பட்டனர். சாரதாசட்டத்தை ரத்து செய்வதற்காக ராஜாபகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியார் கொணர்ந்துள்ள மசோதாவை ஆதரித்தது.

வெளிநாட்டுச்சந்தாதாரர் களுக்கு அறிவிப்பு.

மலேயா, சைகோன், ஆப்ரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பும் பத்திரிகைகளின் தபால்கட்டணம் அரையணாவிலிருந்து முக்காலணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால் டிசம்பர் மாதத்திலிருந்து நமது "குடி அரசின்" வெளிநாட்டு சந்தா ரூபாய் நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பிரிண்டர் அண்ட் பப்ளிஷர்
குடி அரசு ஈரோடு.

குடி அரசு

ஈரோடு 1.1932 ஜனவரிமீ 17உ

சுயராஜ்யம்!
சுயராஜ்யம்!!

இப்பொழுது நமது நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் வெள்ளைக்காரர்களைத் துரத்தி விட்டு இந்நாட்டின் அரசாட்சியை நாமே ஆளவேண்டும் என்று தேசீயவாதிகள் ஜனங்களிடம் கிளர்ச்சிசெய்து அவர்களைத் தூண்டி வருகிறார்கள். இதற்காக சட்ட மறுப்பு, வரி கொடாமை முதலிய இயக்கங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகவும், தீண்டாத வகுப்பினர்களாகவும் உள்ள சுமார் 7 கோடி மக்கள் இந்துக்களின் ஆட்சியை விட வெள்ளைக்காரர்களின் ஆட்சியையே — அதாவது அவர்களின் பாதுகாப்பையே விரும்புகின்றனர். இவ்வாறு இவர்கள் விரும்புவது நியாயமானதே என்பதும், இதற்குக்காரணம் இல்லாமற் போகவில்லை என்பதுமே நமது அபிப்பிராயமாகும். நமது நாட்டிற்கு வெள்ளைக்கார ஆட்சி வருவதற்குமுன் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக, இந்துக்களுடைய ராஜ்யபாரம் தான் இருந்து வந்தது. அக்காலத்தில் அதாவது அந்தப் பல ஆயிரம் ஆண்டுகளிலும் தீண்டத்தகாத வகுப்பினர்களெல்லாம், தீண்டத்தகாதவராகவும், தெருவில் நடக்கத்தகாதவராகவும், கண்ணால் பார்க்கத்தகாதவராகவும், சண்டாளராகவும், அடிமைகளாகவும், சுகாதார மற்ற சதுப்பு நிலங்களில் வசிக்கின்றவர்களாகவும், உண்ண உணவில்லாதவராகவும், உடுக்க உடையில்லாதவர்களாகவுந்தான் இருந்து வந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வுண்மையை, இந்துக்களின் பரிசுத்தமான நூல்களாகக்கருதப்படும், புராணங்கள், ஸ்மிருதிகள் முதலியவைகளைக் கொண்டும், இந்திய நாட்டின் சரித்திரத்தைக் கொண்டும் அறியலாம். இன்றும், வெள்ளைக்கார அரசாங்கத்தார் தீண்டத்தகாதவர்களுக்குச் செய்ய முன் வரும் சில நன்மைகளையும், மதம், வழக்கம், சாஸ்திரம் என்பவைகளின் பேரால் தடுத்துக்கொண்டிருக்கின்றவர்கள் உயர்ந்த சாதி இந்துக்களே என்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா? நமது மதத்திலும், நமது சமூக சீர்திருத்தங்களிலும் தலையிடாமலிருக்கும், அந்திய ஆட்சியிலேயே உயர்ந்த ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட தீண்டாதார்களைப் பல வகையிலும், தொந்தரவு பண்ணி, அடிமைபோல் மிருகங்கள் போல் வைத்திருக்கவே விரும்புகின்றார்கள்; அவர்கள் விரும்பும் சமத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் எதிராகப்பலமான கிளர்ச்சி செய்கின்றார்கள் என்றால் இப்படிப்பட்டவர்கள் கையிலேயே ராஜ்ய அதிகாரமும் கிடைத்து விட்டால் அப்பொழுது நமது நாட்டு ஒடுக்கப்பட்டவர்களின் கதி என்ன ஆகும்? தென்னப்பிரிக்காவில் உள்ள வெள்ளையர்கள், இந்தியர்களை எவ்வாறு முன்னேற முடியாமல் அடக்கி வைக்கவும், அந்த நாட்டை விட்டு ஓட்டி விடவும் முயலுகின்றார்களோ அதைவிட இன்னும் பன்மடங்கு அதிகமாகத் தீண்டாதார்களை அடக்கி வைக்க முயலுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தென்னப்பிரிக்கா வெள்ளையர்களாவது தங்களுடைய சுயலாபத்தையும், பொருளாதார நிலையையும் கருதி இந்தியர்களை அடக்கி வைக்க நினைக்கிறார்களேயொழிய வேறு மத சம்பந்தமான குருட்டு எண்ணம் அவர்களிடம் ஒன்றுமில்லை யென்று சொல்லலாம். ஆனால் நமது நாட்டு வருணச்சிரம தரும இந்துக்களோ சுயலாபத்தோடுங்கூட, தீண்டாதவர்கள் எப்போதும் தீண்டாதவர்களாகவே அடக்கி வைக்கப்படவேண்டுவது மதக்கட்டளையாகவும், "கடவுள்" சித்தமாகவும், சாஸ்திர சம்மதமாகவும், கருதுகிறார்கள்; கருதுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இக்காரணங்களை முன்னிட்டே இன்று தீண்டாத வகுப்பினரும், மற்ற சிறுபான்மை வகுப்பினரும், இந்துக்களின் அதாவது வருணச்சிரம தரும உயர்ந்த ஜாதி இந்துக்களின் ஆட்சியைவிட அந்நியர்களாகிய வெள்ளையர்களின் பாதுகாப்புள்ள ஆட்சியையேமேலானதாகவிரும்புகிறார்கள் என்பதை வட்டமேஜை மகாநாட்டில் டாக்டர். அம்பெட்கார், திரு. சீனிவாசன் முதலியவர்கள் கூறிய அபிப்பிராயங்களைக் கொண்டும் அறியலாம். இந்தியாவில் பல பாகங்களிலும் அவர்கள் நடத்திய மகாநாடுகளின் தீர்மானங்களைக் கொண்டும் அறியலாம். இவ்வாறு விரும்புவதில் தவறு ஒன்றுமில்லை என்றே நாமும் உறுதியாகச் சொல்லுகிறோம். இவ்விஷயத்தை இன்னும் உறுதியாக வற்புறுத்துவதற்குச் சென்ற டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய மூன்று தினங்களிலும், கல்யாணத்தில் நடைபெற்ற அகில இந்திய சுயராஜ்ய சங்க மகாநாட்டில் தீர்மானங்களே போதுமானதாகும். ஆகையால் அம்மகாநாட்டுத் தீர்மானங்களைக் கவனிப்போம்.

1. "தீண்டாதவர்கள் இந்து மதத்தில் சேர்ந்தவர்கள்தான்"

2. "தீண்டாதவர்கள் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளைப்பின் பற்றுகிறவர்களென்றும் அவர்கள் மேல் மற்ற உயர்ந்த ஜாதி இந்துக்கள் சகோதர வாஞ்சையாட்டி வருகின்றனர்"

3. "சில சீர்திருத்தக்காரர்களால், அவர்கள் அனுகூலமாகக் கிளப்பிவிடப்பட்டதுகாரணமாக, அவர்கள் வருணச்சிரம தருமிகளுக்கு விரோதிகளாய் விட்டனர்"

என்று தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர். இத்தீர்மானங்களிலிருந்து, தீண்டாதாருக்கு இன்னும் ஆத்தேயொழிய ஒரு சிறிதும் உண்மையில்லை என்பது உறுதி. தீண்டாதவர்கள் இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் வரையிலும் அவர்கள் அடிமையாகத்தான் இருந்து தீரவேண்டும். சமத்துவம் பெறவே முடியாது. இந்து மத வேத, புராண, ஸ்மிருதிகளை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் தான் இந்துக்களாவார்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. வேத, புராண, ஸ்மிருதிகளை ஒப்புக்கொண்டால் வருணச்சிரம தருமத்தையும் ஒப்புக் கொண்டாக வேண்டும். வர்ணாச்சிரம தர்மத்தை ஒப்புக் கொண்டால், பார்ப்பான் உயர்ந்தவன், க்ஷத்திரியன் பார்ப்பானுக்குத் தாழ்ந்தவன்; ஆகையால் பார்ப்பான் சொன்னபடி கேட்கவேண்டும்; வைசியன், பார்ப்பானுக்கும், க்ஷத்திரியனுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்; சூத்திரன், மேற்கூறிய மூவர்களுக்கும் வேலை செய்யவேண்டும். பஞ்சமன், சண்டாளன், தெருவில் நடக்கக் கூடாது; ஊருக்குவெளியில்தான் கிடக்க வேண்டும்; கல்வி கற்கக் கூடாது; நல்ல உணவு கொள்ளக் கூடாது; நல்ல உடை தரிக்கக் கூடாது; எந்தப் பொது இடங்களுக்கும் வரக்கூடாது; என்ற நிலையில் இருந்துதான் ஆகவேண்டும். ஆகவே இந்த நிலையில் இருக்கத்தீண்டாதவர்கள் தம்மை இந்துக்களென்று கூறிக்கொள்ளச்சம்மதிக்கலாமா? அப்படிச்சம்மதிப்பதனால், தம்முடைய தாழ்ந்த நிலையை — அடிமை நிலையை — கஷ்டமான நிலைமையை விட்டுக் கரையேற வழியுண்டா என்றுதான் கேட்கிறோம்.

மேல் உள்ள தீர்மானங்களில் மூன்றாவது தீர்மானத்தில், அவர்கள் தங்கள் சமத்துவத்திற்குப் போராடுவது தகாது என்று கூறிவிட்டார்கள். "சீர்திருத்த வாதிகளால் அனுகூலமாகக் கிளப்பி விடப்பட்டார்கள்" என்றதிலிருந்து "தீண்டாதவர்கள் கேட்கும் சமவுரிமை அனுகூலமான தென்று" அல்ல இந்திய வருணச்சிரம சுயராஜ்ய சங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்களெனவும், "தீண்டாதவர்கள் இவ்வுலகிலும் இருந்த அடிமை வாழ்க்கையில் இருப்பதே அவசியமானதென" அபிப்பிராயப்படுகிறார்கள் எனவும் பட்டப்பகல் போல் உணரக் கிடக்கின்றதல்லவா?

இன்னும் அவர்கள் செய்திருக்கும் தீர்மானங்களைப் பார்த்தால் நாம் மேலே கூறியதில்எள்ளளவும் பிசகில்லை என்பதையும், அவை முற்றும் உண்மை என்பதையும் அறிந்து கொள்ளலாம். அத்தீர்மானங்கள் வருமாறு:—

4. "நாசிக் ஆலயத்தையும், ராமகுண்ட தீர்த்தத்தையும், அசுத்தப்படுத்த முயற்சி செய்கின்றவர்களை கண்டிக்கின்றது"

5. "இந்தச் சத்தியாக்கிரகிகளைக் கஷ்டத்தோடு எதிர்க்கும் சனாதன தர்ம இந்துக்களை இம்மகாநாடு பாராட்டுகின்றது. இவர்களுக்குத் தேவைப்படும் பண

உதவியையும் மற்ற உதவிகளையும் செய்ய ஆயத்தமாயிருப்பதாக உறுதி கூறுகிறது'

6. "தீண்டாதவருப்புப்பிள்ளைகளுடன், வருணாச்சிரம தருமிகளின் பிள்ளைகளையும் சேர்த்து பள்ளிக்கூடங்களில் படிக்கும்படி விற்புறுத்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினது நோக்கையும், இந்திய சட்டதானங்களினது போக்கையும் கண்டு இம்மகாநாடு வருந்துகிறது"

இத்தீர்மானங்களுடைய அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருப்பதிலிருந்து அவர்களுடைய மனப்பான்மை இன்னதென்பதை அறியலாம். இந்த மனப்பான்மைதான் நமது நாட்டில் உள்ள உயர்ந்த சாதி இந்துக்களாகிய பார்ப்பனர்கள், அவர்கள் வலையில் சிக்குண்டு கிடக்கும் பார்ப்பனரல்லாதாரகள், இந்துமத பக்தர்கள் எல்லோரிடத்திலும் குடிகொண்டிருப்பதும். இந்த அபிப்பிராயமுள்ள மக்களே மிகுதியாக இருக்கும் ஒரு தேசத்தில் உள்ள ஏழைத் தீண்டாதவர்கள் மக்கள் எப்படி முன்னுக்கு வர முடியும்? அதிலும இவர்கள் கையில அதிகாரமும், ராஜ்ய பாரமும் வந்து விட்டால், இன்று சமதர்மக் கிளர்ச்சி செய்கின்றவர்களின் கதியும், தீண்டாத்தக்க தமக்களுக்குப் பாடுபடும் தலைவர்களின் கதியும் என்ன வாகும்? திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தில் சமணர்களுக்குக் கிடைத்த கழுமேற்றத்தைப் போல தூக்குத் தண்டனையும், ஜீவாந்தர சிட்சையும், சிறைத்தண்டனையும் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை அல்லவா? இவ்வளவு காரியங்களைச் செய்ய இந்து மதமும், இந்துமத சாஸ்திரங்களும் தடை செய்யாமல் இயற்கைக்கு அனுகூலமாகவே இருக்கும் எனறும உறுதியாகக் கூறுகிறோம். ஆகையால்தான் நாம் இந்து மதமும், ஜாதிகளும் ஒழிய வேண்டும் என்று கூறி வருகின்றோம. இவை ஒழிந்தால் இத்தகைய ஆபத்துக்கள் ஒன்றுமில்லை. கல்கத்தா, "அகில இந்திய வருணாச்சிரம சுயராஜ்ய சங்க" மகாநாட்டார், தீண்டாதார்களே இந்துக்களென்று முடிவு கட்டிய பின்னர்தான் "அவர்கள் சமத்துவம் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் அல்லர்" என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்பதை ஆலோசித்துப் பார்ப்பவர்கள் எவரும, இந்த மதம் இருக்கவேண்டுமென்று சொல்ல மாட்டார்கள். இந்து மதத்தை வைத்துக்கொண்டு ஜாதிகொடுமைகளை ஒழிக்கலாமென்றுவது, சமத்துவம் பெறலாம் என்றுவது சொல்லவும் முன்வரமாட்டார்கள்.

இன்னும் அந்த "அகில இந்திய வருணாச்சிரம சுயராஜ்ய சங்க மகாநாட்டில்" மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அது

"தீண்டாத தகாதவர்களின் வர்ணாச்சிரம தர்மத்திற்கு விரோதமான வருண அபிப்பிராயத்தை ஒழிப்பதற்காக நடைபெறும உபதேசிகள் பலரை அனுப்ப வேண்டும்" என்பதாகும்.

இத்தீர்மானம் எதற்காக என்று யோசனை செய்து பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. தீண்டத்தகாதவர்களின் சுயமரியாதை உணர்ச்சியை சமதர்ம உணர்ச்சியை அடக்க அவர்களை இந்துமதத்தவர்களாக-அதாவது அடிமைகளாக — பாபிகளாக — சண்டாளர்களாக — மிருகம்போன்றவர்களாக இருக்கச்செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டதானே ஒழிய வேறில்லை என்பது நிச்சயமாகும்.

இந்தமாதிரி இன்னும்வருணாச்சிரம தர்மப்பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும இந்த நாட்டில் எப்படிச் சுயராஜ்யம் நியாயமாக நடக்க முடியும்? என்று யோசித்துப்பார்க்க வேண்டுகின்றோம். இத்தகைய வருணாச்சிரம தரும மனப்பான்மையை மாற்ற திரு. காந்தியாலாவது, அல்லது மற்ற எந்தத்தேசியவாதிகளாலாவது முடிந்ததா? என்று கேட்கின்றோம். இயற்கையான ஜாதி வருணாச்சிரம தருமக் கொடுமைகளையும், இக்கொடுமைகளுக்குக் காரணமாக இருக்கும மதங்களையும் ஒழித்தால்தான் நாம் சமத்துவம் பெற முடியும்; நாம் ஒற்றுமையடைய முடியும்; நாம ராஜ்ய பாரத்தை நீதியோடு—சமாதானத்தோடு—எல்லா மக்களும் சுகமடையும்படி நடத்த முடியும் என்று கூறுகின்றவர்களைத் தேசத்துரோகிகள என்று சொல்லும கூட்டம மெஜாரிட்டியாக இருக்கும் ஒரு தேசம் எப்படி முன்னேற்ற மடைய முடியும்? அத்தேசத்தில் உள்ள—கொடுமைப்படுத்தப்படுகின்ற மக்கள்—சிறுபான்மைச் சமூகத்தினர் எப்படி சம உரிமையைப் பெற்று அதை அனுபவிக்க முடியும்? என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

நமது நாட்டிலேயே பிறந்து, நமது நாட்டிலேயே வளர்ந்து, நமது நாட்டிலேயே வாழும மக்களை கொடுமைப்படுத்தும் வருணாச்சிரம தர்மிகளாகிய சகோதரத் துரோகிகளை அடக்க முடியாமல்—அவர்களுடைய செலவாக்கை ஒழிக்க முடியாமல்—அவர்களுடைய மதங்களையும், சாஸ்திரங்களையும் சுட்டுப் பொசுக்க முடியாமல, அப்படிச் செய்வதற்கும் மனமில்லாமல் இருக்கின்ற நாம் எந்தக்காரியத்திலதான் வெற்றி பெற முடியும்? என்று கேட்கிறோம். "சுயராஜ்யம்" "சுயராஜ்யம்" என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றத்தான் முடியுமே ஒழிய வேறு ஒன்றும முடியாது என்று உறுதியாகக் கூறுகிறோம.

——

திருவாங்கூர் திவான்

பார்ப்பனராஜ்யமாகிய திருவாங்கூர் சமஸ்தானத்தின தற்போது திவான் திரு. சுப்பிரமணிய ஐயர் என்பவருக்குப்பின நீலகிரி டாக்டர் திரு. டி. ஆஸ்டின் என்பவர் திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் சில வருஷங்களுக்கு முன் திருவாங்கூரில் உதவித்தலைவராக இருந்தவர். திரு மதி. ஆஸ்டின் திருவாங்கூர் பெண்கள் ஆஸ்பத்திரியில் தலைமை டாக்டராக இருந்தவர். ஆகவே இவர்களுக்கு திருவாங்கூரைப்பற்றிய அனுபவம் முன்னமே உண்டு. திருவாங்கூர் ராஜ்யத்திற்கு ஒரு பார்ப்பனரல்லாதார திவானாக நியமிக்கப்படாவிட்டாலும் ஒரு ஐரோப்பியரையாவது திவானாக நியமித்ததைப்பற்றி நாம் சிறிது மகிழ்ச்சியடைகின்றோம். ஏனென்றால் நூற்றுக்கணக்கான வருஷங்களாகத் திருவாங்கூர் திவான பதவி பார்ப்பனர்களின் பரம்பரைச் சொத்தாகவே இருந்து வந்திருக்கிறது. உதாரணம் வேண்டுமானால் இதற்குமுன்னிருந்த திவான்களின் கணக்கைப் பார்த்தால் விளங்கும.

சென்ற 1817ம் ஆண்டு முதல் 1931ம் ஆண்டு வரையிலும் 24 திவான்கள இருந்திருக்கின்றனர். இவர்களில் திரு. நாராயணப்பிள்ளை என்பவர் 1877 முதல் 1880 வரையில் மூன்று வருஷமும, இப்பொழுது சென்னை அரசாங்கத்தில் சட்டமந்திரியாய் இருக்கும் திரு. கிருஷ்ணசாமி ஐயர் 1914 முதல் 1920 வரை ஆறு வருஷமும திருவாட்சனை எனனும ஐரோப்பியர் 1925 முதல் 1929 வரை நான்கு வருஷமும் திவான்களாக இருந்திருக்கின்றனர். இவர்களை திவான்களாக இருந்த 13 வருஷங்கள் போக பாகி 101 வருஷங்களும பார்ப்பனர்களே திவான்களாக இருந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு ராஜ்யத்தில் தற்சமயத்தில் ஒரு ஐரோப்பியர் திவானாக நியமிக்கப்பட்டது ஆச்சரியப்படக்கூடிய சம்பவமேயாகும்

தாழ்த்தப்பட்டவர்களின் சமவுரிமைக்காகச் சென்ற வருஷம் சுசீந்திரத்தில் கடைபெற்ற சத்தியாகிரகம் ஒரு பயனும் இல்லாமல் போயிற்று. பார்ப்பனதிவான் ஆதிக்கத்திலும் மற்றும் பார்ப்பன உத்தியோகஸ்தர்களின் பாமரிப்பிலும் உள்ள ஒரு சமஸ்தானத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எப்படிச்சமத்துவம் பெற முடியும்? அந்தப்பார்ப்பனர்கள் கம்மாவிட்டுவிடுவார்களா?

ஆனால இனி திருவாங்கூரில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்குச் சிறிது நன்மையுண்டாகுமென்று எதிர்பார்க்கிறோம். அவர்களுடைய சமதர்மத்திற்கு ப்புதிய திவான்மூலம் உதவி கிடைக்கலாம். பார்ப்பனீயத்தையும் வருணாச்சிரமத்தையும் கைக்கொள்ளாத ஒரு ஐரோப்பிய திவான்மூலம் திருவாங்கூரின் தாழ்த்தப்பட்ட மக்கள் சிறிதளவாவது நன்மைபெறக்கூடும் என்று நம்பியே நாம் புதியதிவானை வரவேற்கிறோம். புதியதிவானும் கஷ்டப்படுவோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவராக நடந்து கொள்ளுவானென எதிர்பார்க்கிறோம்.

சாமி. சிதம்பரனார் அறிக்கை.

திரு. காந்தியின் முன்னுக்குப்பின் முரணான சங்கதிகள் என்பதுபற்றி, 1 மாதத்தில் 2000 வார்த்தைகளுக்கு மேற்படாமல் தக்க விஷயங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டி ஒரு வியாசம் எழுதியனுப்புகிறவர்களுக்கு 10 ரூபாய் இனாம அளிப்பதாகச்சென்ற 15-11-31ல அறிவித்து அவ்வாறு வரும் கட்டுரைகளைப் பரிசோதிக்கும் உரிமை எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் "குடி அரசில்" குறித்த காலத்திற்குள் ஒரு கட்டுரையைத்தவிர வேறு கட்டுரைகள வரவில்லை. ஆகையால் இனாம் கொடுப்பதை நிறுத்தி விட்டேன். குறித்த காலம் கழித்து ஏராளமான கட்டுரைகள் வந்தன. அவைகள் கையவசம் இருக்கின்றன. அவைகளை நாளடைவில் "குடி அரசில்" வெளியிடுவதற்கு எண்ணியிருக்கிறேன்,

சாமி. சிதம்பரன்

எரிவதை இழுத்து விட்டால்!

(பைத்தியம் கிழித்தது.)

"எரிவதை இழுத்து விட்டால் கொதிப்பது நின்றுவிடும்" என்று சொல்லுவார்கள். இந்த நிலைக்கு இப்பொழுது காங்கிரஸ்வந்து விட்டது. எல்லாம் பணத்திலுல் தான் நடந்து கொண்டிருந்தது. பொது ஜனங்களிடம் என்னென்னவோ சொல்லி உண்டியல் குலுக்கினார்கள்; நன்கொடை குலுக்கினார்கள்; இவைகளைக் கையிருப்பாகவைத்துக்கொண்டு தொண்டர்களுக்குக் கூலி கொடுத்தார்கள். தொண்டர்கள் தலைவர்கள் சொற்படி ஆடினார்கள்.

ஆனால் இப்பொழுது காங்கிரஸ் பணத்திற்கு ஆபத்து வந்து விட்டது நல்ல வேலை செய்தார்லாட்டு வில்லிங்டன்; பணம் பத்தும் செய்யும் என்பது அவருக்குத் தெரியாதா? அட! அப்பா! அவர் சமகாதட்பேர்வழி யல்லவா? காங்கிரஸ் பணங்களைப் பறிமுதல் செய்யும்படி சட்டம் பிறப்பித்து விட்டார்; பொது ஜனங்கள் காங்கிரசுக்குப் பண உதவி செய்வது குற்றமென்றும் சட்டம் ஏற்படுத்தி விட்டார். பாவம்! தொண்டர்கள் பாடு திண்டாட்டத்திற்கு வந்து விட்டது.

அரசாங்கத்தாரோ வெகு தந்திரமாகக் காரியம் பண்ணுகிறார்கள். தலைவர்களை மாத்திரம் பிடித்துச் சிறைவைக்கிறார்கள். தலைவர்கள் என்ன சோற்றுக்கில்லாதவர்களா? அவர்களை என் சிறையில் ஏ வகுப்பிலும், பி வகுப்பிலும் வைத்துச் சோறு போட வேண்டுமா? தொண்டர்கள் தானே நித்திய தரித்திரக்குடும்பார்கள்! இவர்களை பிடித்துச் சிறையில் வைக்கக்கூடாதா? காங்கிரசில் இருந்து பணம் வரவும் வழியில்லை; பொது ஜனங்களிடமிருந்து வசூல் செய்யவும் முடியவில்லை. அரசாங்கத்தாரோ தங்கள் ஜெயில் மாளிகைக்கு அழைத்துபோய் விருந்து வைக்கவும் மாட்டேன் என்கிறார்கள்! மீறி நானே வருகிறேன என்று அழையா விட்டுக்கு நுழையா விருந்தாகப்போனால் தடியடி கொடுக்கிறார்கள்.

அரசாங்கத்தார்கள் தான் என்ன செய்வார்கள்? தலைவர்கள் நூற்றுக்கணக்கில் அடங்கி விடுவார்கள். தொண்டர்களை யெல்லாம் பிடிப்பதென்றால் ஆயிரக்கணக்காக ஆகிவிடுவார்கள். அவர்களுக்குச் சோறுபோட யார் தாலியை அறுப்பது?

ஆகையால் தொண்டர்களும் இடைபொழுது கொஞ்சம் யோசனை செய்கிறார்கள். நமக்கேண்டா இந்தச் சனியன்! லாபமில்லாத காரியத்தில்போய் மண்டை உடைபடுவானேன்! என்று அனேகர் வாய்பேசாமல் இருக்கிறார்கள். வேறு வழியற்று பிழைப்புக்கு வழிபார்க்கிறார்கள். தொண்டர்கள் கூட்டத்தில் என்ன பேச்சு நடக்கிறதென்று கொஞ்சம் ஒற்றுக் கேட்டோம். இவ் விஷயம் தெரிந்தது. நாம்தான் பைத்தியம் ஆயிற்றே. தெரிந்ததை உளறிக்கொட்டி விட்டோம். இவ்வளவுதான் சங்கதி.

திருச்சி முனிசிபல் தலைவர் தேர்தல்.

9-1-32 தேதி மாலை 5 மணிக்கு டிப்டி கலெக்டர் திரு. ராகுன்னி நாயர் அவர்கள் தலைமையில் முனிசிபல் கூட்டம் கூடியது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 அங்கத்தினர்களும் வந்திருந்தனர். சேர்மென் பதவிக்கு திரு. பி. ரெத்தினவேலுத் தேவர் அவர்களை திரு. டொவ்லா அவர்கள் பிரேரேபித்தார். திரு பு. ராமசாமி அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பெற்ற திரு. டி. வி. நல்லுசாமி பிள்ளை அவர்களால் ஆதரிக்கப் பெற்றது. திரு. கே. சிங்கம அய்யங்கார் அவர்களை திரு பொன்னையா பிள்ளை பிரேரேபித்து திரு. பொன்னுசாமி செட்டியார் ஆதரித்தார் பிறகு ஓட்டு எடுக்கப்பட்டதில திரு. பி. ரெத்தினவேலுத தேவர் அவர்களுக்கு 19 ஓட்டுகளும் திரு. கே. சிங்கம அய்யங்காருக்கு 15 ஓட்டுகளும் கிடைத்ததால் திரு. தேவர அவர்களே தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். உபத்தலைவராக திரு டி. வி. நல்லுசாமி பிள்ளை அவர்கள தேர்ந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

இலங்கையில் இராகவனுக்கு உபசரிப்பு.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் திரு. எ. இராகவன் அவர்கட்கு இலங்கை இந்திய சயமரியாதைச்சங்கத்தாரால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. ஷேபத்திரத்திற்குபதிலளிக்குமுகத்தான் சயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும் 'கடவுட்புரட்டு' 'சாஸ்திரப்புரட்டுகளையும் இன்னும்பல தரிய விஷயங்களைப் பற்றியும் பேசியபின் தலைவர்களுக்கு ஜே! என்ற சப்தத்துடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீண்டப்படாத திறிவ்துவர் முதல் மகாநாடு.

திருச்சிற்றப்பள்ளி ஜில்லா லாலுகுடி தாலூகா தீண்டப்படாத இதில்வர் முதல் மகாநாடு, லாலுகுடி தாலூகா போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்தில் 23-1-32ந் தேதி சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் நடைபெறும்.

மகாநாட்டுத் தலைவர் திரு. எஸ். எம். ஞானப்பிரகாசம் அவர்கள், பி. ஏ பி. எல். சென்னை.

மகாநாட்டுத் திறப்பாளர் மில்லல் ராமசுப்பிரமணியம் அவர்கள்.

வரவேற்புக்கழகத்தலைவர் திரு. எஸ். எஸ் ஸ்ரீரங்கியசாமி உபாத்தியாயர் அவர்கள்.

மகாநாட்டில் பலதலைவர்கள் சொற்பொழிவாற்றுவார்களென ஷெகாகாட்டுக்காரியதரிசிகள் எழுதுகிறார்.

மதுரை.

சுயமரியாதைச்சங்கம்.

ஷேசங்கத்தின் பொதுக்கூட்டம் 12-1-32தேதி செவ்வாய்க்கிழமை கூடியது. அதுசமயம் சங்க அங்கத்தினர்களால் தயாரிக்கப்பட்ட சங்க விதிகளை சிலதிருத்தங்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தொம்பக்குளம்

சுயமரியாதைச்சங்கம்.

ஷேசங்கத்தின் கூட்டமொன்று திரு பி குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் அங்கத்தினர்கள் யாவரும் வந்திருந்தனர். பின் திரு எ. செய்யாய கள் அவர்களும் சங்கசுகாரியதரிசி அவர்களும் தீண்டாமையைப்பற்றிப் பேசியபின் சில தீர்மானங்கள் நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்

விளம்பரம்

திருப்பூர் மு. மு. கோர்ட்டு

1931-வது O S. No. 901.
1932-வது I. A No. 26.

பல்லடம் தாலூகா நல்லூர் கிராமம் தண்ணம்பாளையம் பெருமாள் போயன் மகன் முசபோயன்—வாதி தீ மனுதாரன்.

பல்லடம் தாலூகா முத்தணம் பாளையம் கிராமம் சுவந்தம் பாளையம் உத்தண்டி கோயன் மகன் மாதபோயன்—பிரதிவாதி.

மேலெழுதிய வாதி பிரதி வாதி பேரில் அடமான பத்திரப் படிக்கு ரூ. 150-0-0க்கு தாவா தொடர்ந்தும், மேலே பிராது முடிவாகும் வரையில் அடமான பத்திரத்தில் கண்ட வீட்டை வாதி ஸ்வாதீனம் செய்துகொண்டு பாதுகாத்து வரவும் மனுசெய்து கொண்டு அதுகளுக்கு விசாரணைவாய்தா 26—1—32ல் ஏற்பட்டிருக்கிற சங்கதி இதன மூலியமாய் தெரிவிக்கலாயிற்று மேலே தேதியில் ஆஜராகி எதிர்வாதங்கள் தெரிவிக்கத பக்ஷத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிகபபடும் என்பதை தெரிவிக்கலாயிற்று.

(Sd) N. கோபால்ராவ்
B. A., B. L., வாதி வக்கீல்.
திருப்பூர். 11—1—32.

"போர் முரசு".

சுயமரியாதைக் காலணி பத்திரிகை.

27-1-32ந் தேதி முதல் ஒவ்வொரு புதனன்றும் வெளிவரும்.

ஆசிரியர்:—ச. ம. சி. பரமசிவம்.

நாட்டைப் பாழ்படுத்தும் வைதீகம், குடியைக்கெடுக்கும் கருப்பு நடவடிக்கை, மனிதரை மனிதர்மாய்க்கும் மிருகச்செயல் முதலியவற்றை முழுமூச்சாக ஒழித்து, நாட்டிலுள்ள சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பி, மக்களிடையே பகுத்தறிவையும் சமதர்ம நெறியையும் நிலைநாட்ட (1932) ஜனவரி மீ 27ந தேதி (தை 14) முதல் "போர் முரசு" வெளிவரும்.

முன்னும் பின்னுள்ள எழுத்துக்களும் வீரஞ்செறிந்த சொற்களும் கூர்தல்களும் கட்டுரைகளும் 'போர் முரசு''ல் கலந்து தொனிக்கும்.

அனைத்தழுடியாத அபிப்பிராயங்களையும் அறிவுக்குணவான செய்திகளையும் அழகுமிகுந்த நடையினையும் கண்டு கேட்டு மகிழ விரும்புவோர் "போர் முரசை" நாடுவாராக.

போர் முரசுக்கு ஒவ்வோர் நகரிலும் ஏஜண்டு தேவை. கமிஷன் கொடுக்கப்படும் வேண்டுவோர் முந்திக்கொள்வாராக.

மானேஜர்

"போர் முரசு"

19, பெரியசெட்டித்தெரு, கரையூர், திருச்சி.

பார்ப்பனர்களும், காங்கிரசும்.

(S சிவானந்தம்.)

பார்ப்பனர்கள் காங்கிரசை உற்பத்தி செய்ததின் முக்கியகாரணம் தங்கள் குலத்தின் மேம்பாடு குன்றாமல் மென்மேலும் விருத்தியாகவும், சுயராஜ்யம் பெற்றால் பிராமணரல்லாதவர்களான நம்மவர்களைத்தங்களிஷ்டப்படி நடத்தலாம் என்ற கோரிக்கைதான். பார்ப்பனர்கள் சொல்லும் பசப்பு வார்த்தைகளுக்கு இடைகொடுத்து நம்மவர்கள் அடையும் தீமை கொஞ்சமல்ல. ஆனால் பார்ப்பனர்கள் அத்தீமைகளிலிருந்து விலகி நம்மை அவைகளுக்கு உள்ளாக்கி விடுகிறார்கள். எப்படியென்றால் சத்தியாக்கிரகங்கள் செய்வதிலோ, பொது இடங்களில் காங்கிரல் கூட்டங்கள் கூடுவதிலோ அன்னியத்துணி அல்லது கள்ளுக்கடைமறியல் செய்வதிலோ தலைமைவகித்து கடத்துவதாக படாடோபங்கள் செய்வது பார்ப்பனர்கள். ஆனால் போலீசார் வசம் அகப்பட்டு ஜெயிலுக்குப்போவது நம்மவர்கள். காங்கிரல் என்று கதறிகொண்டிருக்கும் பார்ப்பனர்கள் இச்சமயங்களில் இருக்கும் இடம் தெரியவில்லை. அல்லது காங்கிரசிலிருந்து நீங்கிவிட்டதாகவும் பாவனை செய்து நம்மை பல துன்பங்களுக்கு ஆளாக்கி வேடிக்கைபார்க்கின்றார்கள்.

நம் தென்னிந்தியாவில் வசிக்கிற பார்ப்பனர்கள் காங்கிரல் என்றும், மறியல் என்றும், சொல்லிக்கொண்டு அலைகளின் பெயராலும், சொல்லுத்தாலும் கையில உண்டியல் ஏந்திப்பிச்சை எடுக்கின்றார்கள். நம்மைசேர்ந்த பார்ப்பனரல்லாதவர்களையே பிச்சை எடுக்கும் கூலிகளாக அமர்த்தித்தாகல் பிரசாரம செய்ய முன்வந்துவிடுகிறார்கள். இதில் பிச்சைஎடுப்பவர் ஒருவர், பலனை அடைபவர் இன்னொருவர். காங்கிரசினை பெயரால் பார்ப்பனர்களுக்கு இது ஒரு ஜீவனோபாயம். பார்ப்பனர்கள் ஆதிக்கம் பரவுவதை முன்னிட்டே செய்த ஏற்பாடுகளில் இது ஒன்றாகும். இந்த நெருக்கடியான சமயங்களில் நாம் கண்மூடித்தனமாக இருப்பது அழகல்ல.

சட்டசபை, ஜில்லாபோர்டு, தாலூகாபோர்டு, முனிசிபல் எலெக்ஷன்கள் வந்துவிட்டால் இந்த காங்கிரல் பார்ப்பனர்கள் படும்பாடு கொஞ்சமல்ல. எலெக்ஷனுக்கு ஒருவருஷத்திற்கு முன்னதாகவே கதற ஆரம்பித்துவிடுவார்கள். அப்போது பல கட்சிகள், சங்கங்கள் குட்டிபோடும். இந்த சமயத்தில் பார்ப்பனர்கள் செய்வதென்னவென்றால் யாவராக இருந்தாலும் சரி, அவர்களை தயவுடன் உபசரிப்பார்கள். தங்கள் காரியம் பூர்த்தி அடையும்வரை அவர்களை மேன்மையாக நடத்துவார்கள். காரியம் முடிந்ததும் அவர்களை கிமிர்ந்தும் பார்ப்பதுமில்லாமல் பகிகுழியில் தள்ளவும் யத்தனிக்கிறார்கள். இதை கொஞ்சமும் நம்மக்கள் உணர்ந்தபாடில்லை.

பார்ப்பனர்கள் ஹிந்திபாஷையில் என்மிக்க நிறத்தை எடுத்திருக்கிறார்கள் என்று ஆராய்வோமானால் அதுவும் சுயநலங்கருதியே செய்ததாகும். பார்ப்பனமதத்தை வளர்ப்பதற்கு ஹிந்திமிகவும் துணை செய்யக்கூடியது. பார்ப்பனர்களுக்கு சமஸ்கிருதம் நன்றாகத்தெரியுமாகையால் அதைக்கொண்டு ஹிந்தியை இலகுவில் படிக்கக்கற்றுக்கொள்ளலாம். கடைசியில் காங்கிரஸ்வெற்றி அடைந்தால் ஹிந்தி பாஷையை தலை பாஷையாக வைத்துக்கொண்டு தாங்கள் எளிதில் அதில் தேர்ச்சி அடைந்து தங்களிஷ்டப்படியே உத்தியோகங்களில்முதன்மையாய்ந்து இருக்கலாம்என்கிற எண்ணத்துடன் தான், ஹிந்திப் பிரசாரத்தின் மூலமாய் கணக்கற்ற பொருள்களைப்பார்ப்பனர்கள் கொள்ளைகொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் சம்மந்தமான வைகளில் பார்ப்பனர்களின் எண்ணிக்கையைப்பற்றி சிறிது ஆராய்வோம். தற்போது தென் இந்தியாவில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் 90 சத வீதம் இருக்கிறார்கள். காங்கிரஸ் கூட்டங்களில் தலைமை வகிப்பது யாரென்று கவனித்தால் அதேமாதிரி பார்ப்பனர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் தொண்டர்கள் என்கின்ற முறையில் கணக்கிட்டால் 10 சத வீதம் தான் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். இதில் மாத்திரம் நம்மவர்கள் 90 சத வீதம் தலைகொடுத்து சலுக்கடிகளுக்கும் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும் ஆளாகிறார்கள். காங்கிரஸில் மெம்பர்களாகப் பார்ப்பனர்கள் குமிழ்கிறார்களே இவர்கள் இதற்கு முன்னதன் கைப்பாடுபட்டு பிறர் மெச்சும்படியான வாழ்க்கையைக் கைக்கொண்டு இருந்தவர்களா என்று கவனித்தால் அப்படி ஒன்றும் இருக்கிறதாகப் புலப்படவில்லை. காங்கிரஸ்காரர்கள் எல்லாம் தின்னைத் தூங்கிகளாகவே இருப்பார்களென்பதற்கு எதாவது ஐயமுண்டா? 'காங்கிரஸ், காங்கிரஸ்' என்று நம் தேச மக்களைமனக்கலக்கஞ்செய்து, அவர்களுடைய காசுகளையும் காங்கிரஸ்என்கின்ற பதித்த உலகத்தைப்பாழ்படுத்துகிறார்கள். இக்காங்கிரஸ் பார்ப்பனர்கள் இதற்குச்சமாதானம் சொல்வதென்ன வென்றால், குற்றமெல்லாம் ஆங்கிலேயர்கள்மீது சுமத்துகிறார்கள். தன் குற்றம் தெரியாது பிறர்மேல் குற்றம் சுமத்தும் பார்ப்பனக் காங்கிரசை நம்புவதில் யாதொரு பிரதிபலனையும் நம்மால் அடைய முடியாதென்பது மிக்க உறுதியாகக் கூறுமளவிருக்க முடியாது. அதன் உண்மையை வாசர்களே அறிவார்களென்று நம்புகிறேன்.

உள்ளூர ஆராய்ந்து பார்ப்போமானால் பார்ப்பனர்களிடத்தில் என்னளவேனும் தேசியம் என்பது கிடையாது. எல்லாம் பகல் வேஷமாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை எல்லாம் வைரவாளுக்கு உபமானமாகச்சொல்வதில் ஏதேனும் பிசகுண்டா என்பதை வாசகர்களே கன்கு உணருவார்கள். காங்கிரல் பார்ப்பனர்கள் பிரிட்டிஷ சர்க்காரையும், பார்ப்பனரல்லாதவர்களையும் வசைகூறிக்கொண்டதான் வயிறு பிழைக்கிறார்கள். இந்த மாதக்கேடான பிழைப்பு நமக்கெதற்கு? தேச ஊழியம் என்று சொல்லிக்கொண்டு ஊரைப் பாழ்படுத்தும் காங்கிரல் காரர்களை நாம் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. கண்டிக்காது மௌனம் சாதித்து விட்டால், தற்போது நம் தென் இந்தியர்கள் இருக்கும் நிலைமையைவிட இன்னும் கேவலமான நிலைமையில் இருக்கவேண்டியதுதான். பிறகு காங்கிரல் பார்ப்பனர்கள் நம்மேல் மிளகாய் அரைக்க ஆரம்பிதது விடுவார்கள். பூரண சுயேச்சை இந்தியாவிற்கு வந்து விட்டால் நம் பார்ப்பனாகள் தீண்டாதார் என்று சொல்லப்படுபவர்களை 18 அடி விலகும்படி சொல்வதை விட்டு 18 கஜதூரத்திற்கும் இன்னும் அதற்கு மேலும் விலகும்படி சொல்வார்கள் என்பதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது. இவைகளை எல்லாம் கண்ணுறும் நம் மக்கள் பயங்கொள்ளித்தனமாக இருப்பது சௌசத்தக்கது அல்ல.

நம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுய உணர்ச்சி உண்டாகி பார்ப்பன காங்கிரசின் ஜாழல்களைக் கண்டித்து வருவதுதான் இந்த நெருக்கடியான சமயத்தில் செய்யவேண்டிய முக்கிய காரியம். பார்ப்பன காங்கிரசின் சூழ்சியாகிய மாயவலையில் சிக்காது அமைதியாய் வேலையை அறத்து எரிவதற்கான ஏற்பாடுகளுடன் கண்ணைக் கட்டிக்கொள்ளுமாறு நமமவர்களை நான் தாழ்மையாகப் பிரார்த்திக்கிறேன்.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

கூடி சங்கத்தின் வாராந்திரக்கூட்டமொன்று 10-1-32 நான் ஞாயிறன்று மாலை 7 மணிக்கு சங்கதலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் என். கே. கல்தூரியவாகளால் சுயமரியாதைக் கீதகள் பாடப்பட்டன. பின்னர் தோழர் எஸ். எ. மாணிக்கம் அவர்கள் "யார் என்ன செய்தாலென்ன?" என்ற தலைப்பைக்கொண்டு மிக அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார். அதில் அரசியல் புரட்டர்களின கிளர்ச்சிகளால் காட்டில் இற்றை நான் குடிகொண்டுள்ள அமைதியின்மையின் பால் நாம் வீணே கவனத்தைச் செலுத்திவிடாது சமுதாயத்தை அபிவிருத்திக்கான ஆக்க வேலைகள் செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றிப்பெரிதும் வற்புறுத்திப்பேசினார். பின்னர், அக்கருத்தை யொட்டி தோழர்கள் ஆர். இரங்சாமி, கி. எல். கந்தசாமி, பி. ரங்சாமி ஆர். லென் ஆகியவர்கள் பேசினர்கள்.

பின்னர்தலைவரவர்கள் கல்கத்தாவில் கூடிய அகில இந்தியவர்ணாசிரமசங்க ராஜ்ய சங்கத்தார் நிறைவேற்றிய தீர்மானங்களில் தீண்டாதார்களும் இந்துக்களே என்றும், அவர்களும் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளைப் பின்பற்றபவர்கள் தானென்றும் குறித்துக்கொண்டு அதற்கு முற்றிலும் முரணாக இந்துக்களெனபபடுவோர் அநுபவிக்கும் சகல உரிமைகளையும் தீண்டப்படாதார் என்போர் அடைய முற்படுவதைக் கண்டித்து அவர்களை யெதிர்க்கும் சனாதன தர்மிகளைப் பாராட்டி மிகவாதாரித்துமிருப்பதை விளக்கி மிக உருக்கமாகப் பேசி அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரரேபிக்க அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"தீண்டாதார் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தானென்றும், வேதம், புராணம், ஸ்மிருதி ஆகியவற்றைப் பின்பற்றபவர்களென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முன்னுக்குப்பின் முரணாக சிர்திருத்தக்காரர்களால் வர்ணாசிரம தர்மிகளுக்கு விரோதமாக தீண்டாதார் தண்டிவிடப்பட்டிருப்பதாயும், காசிக் கலாராம் ஆலயத்திலும், ராமலுண்ட தீர்த்தத்திலும் தீண்டாதார் பிரவேசித்ததாலலைவர்கள் அசுத்தமடைந்ததலைவர்களைக் கண்டித்தும் அவர்களை எதிர்த்த சனாதன தர்மிகளைப் பாராட்டியும் தீண்டாதவருப்புப் பின்னாகளுடன் வாணாசிரம தாமிளின் பிரமுகளும் சோத்து படிக்குமபடி பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும சதேச சமஸ்தானங்களும்புறுத்தக்கூடாதென கண்டித்தும் அவர்கள் படிக்கும் பாடசாலைகளைப் பகிஷ்காரித்த தவராகா சனாதன தர்மிகளைபபாராட்டியும் சாரதா சட்டத்தை ஒழிதலுவிடமுன்வந்திருக்கும் பிற்போக்காளராம் ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியாரை யாதரித்தும் அகில இந்திய வர்ணாச்சிரம சுயராஜ்ய சங்க மகாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை இச்சபை வன்மையாகக்கண்டிக்கிறது"

பின்னர் தலைவர் முடிவுரையில் "யார் என்ன செய்தாலென்ன?" என்ற கேள்விக்கு விடையாகச் சொற்பொழிவாளர்கள் பேசியதை யாதரித்து அரசியலுலகில் சுயலமிகள் செய்துவரும் புரட்டுகளைத் தமது அநுபவப்பிரமாணத்துடன் விளக்கி நமதுபக்க அபிவிருத்திக்கான துறையில் எல்லோரும ஈடுபட்டுழைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி மிக உருக்கமாகக் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போற் பதியச் செய்யும் முறையில் தீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

இரவு 10 மணிக்குத்தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தேமாதரகீதத்துடன் கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பார்ப்பனீயத்தை அறவே ஒழி.

(8-ம பக்கத்தொடர்ச்சி)

ரது கோபத்தினுல் எங்கும் பஞ் சம்.

புரோகிதர்கள்:- நீங்கள் என் வெறுங்கையோடு வந்திருக்கிறீர் கள்.

ஜனங்கள்:- நாங்கள் தன்பம் நிறைந்த மனதுடன் வந்திருக்கி றோம். கடவுள் காணிக்கை செ லுத்துகிறவர்களின் குறைகளை யே கேட்பவர், நாங்கள் எங்கள் உயிரையே காணிக்கையாக கொ ண்டுவந்திருக்கிறோம். தன்பம் என்னும் புஷ்பத்தையும் கொண் டுவந்திருக்கிறோம்.

புரோகிதர்கள்:- அவருக்கு இவை தேவை யில்லை. பலரு டைய தன்பத்தை அவர் பொரு ட்படுத்தபவரல்ல. சிலருடைய சந்தோஷமே திருப்தியளிக்கக் கூடியது. எவ்வளவு தைரியத் தோடு நீங்கள் இப்படிப்பேசுகி றீர்கள். மரியாதையாகத்திரும்பி விடுங்கள்.

ஒருவர்:- நான் ஒருதேங்காய் கொண்டுவந்திருக்கிறேன்

புரோகிதன்:- அஃதென்ன அற்பம்.

ஓர் வயோதிகன்: நான்ஒரு ஆடு கொண்டுவந்திருக்கிறேன். கூட் டத்திலுள்ளவர்கள், (கோபத்து டன்) அந்த ஆடு திருடியது, அவன் எஜமானனிடம் திருடி யது.

வயோதிகன்:- இல்லை! இல்லை! நான் அதை விலைக்கு வாங்கி னேன்.

ஒருவன்:- உனக்கு அவ்வளவு பணமேது.

வயோதிகன்:- அது உனக்குத் தெரியும். என் மகளை விற்று அந்தப்பணத்திற்கே ஆடு வாங்கினேன். ஆட்டை பலியிடுங் கள், என மகளை பலியிடுவதற்கு சமமாகும்.

புரோகிதன்:- ஒரு ஆடு-அவன் மகள், என்ன வித்தியாசம்.

"எல்ல ஏழைகளும் ஆடுகளே" (விக்கிரகத்தின் பின்புறமிருந்து சத்தம்.)

புரோகிதன்:- ஆட்டைக்கொ ல்லுங்கள். (ஆட்டை கொல்லப் போகும் அசமயம் ஒரு சாது உள்ளே வருகிறார்.)

ஜனங்கள்:- யார் அது? ஓகோ அவர்தான் கடவுளைப்பற்றி அதி கம் எழுதிய புலவர். அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

சாது:- கடைசியாக பைத்திய காரனைதற்கு சந்தோஷிக்கி றேன். நம் எல்லோரும் என் கஷ்டப்பட வேண்டுமே, முட் டாள்கள்,

ஜனங்கள்:- நாங்கள் எல்லோ ரும் கஷ்டப்பட்டுத்தான் தீரவே ண்டுமென்று எல்லோரும் சொல் லியிருக்கிறார்கள். தாங்களும் கூட முன்னம் சொல்லி யிருக்கி றீர்கள், எழுதியிருக்கிறீர்கள்.

சாது:- அப்படியா.....நான் என்னுடைய பாட்டுக்களைச்சு டு கொளுத்தி விட்டேன். பொ யும் மோசமும் நிறைந்த மந்திய நாட்களைப் புதைத்து விட்டேன். என் வீட்டின் மேல் மாடியில் உட்கார்ந்து கொண்டு, பசியினால் வாடுகின்ற உலகத்தைப்பார்த்து அது 'கடவுள் சித்தம்', 'கன்ம வினை' என்று புலமை நிறைந்த பாட்டுகள் பாடுவதும், மற்றவ கள் மிகவும் தாழ்ந்த நிலையிலும், கோயிலும், வீடிலுமலும், கந்தையோடும், பசி யோடும் வாடி வதங்குவதைப்பற்றி யோ சிப்பதும், ஒரு சிலரதுசௌக்கிய மான வாழ்க்கைக்கு சேர்விசேத மாயிருப்பதும், கடவுளது அறிய முடியாத திருவிளையாடல்களில் ஒன்றென எண்ணியதும் எல் லாம் மோசமும் பொய்யுமே— கடவுளைப்பற்றி நான் அவ்வளவு புகழ்ந்தெழுதியதற்குக் காரணம் சௌக்கியமான வீட்டில் வசித்து வந்தேன். காலந்தவாது கவலை யின்றி உணவருந்தினேன். புஷ்ப ங்களும், பறவைகளும் அழகான வையென்று நினைக்க சவகாசமி ருந்தமையால் அவைகள் அழகா னவை என்று எண்ணினேன். கடவுள் என்றால் என்ன? கவலை யற்ற சாப்பாடும், அதன் பின்னர் ஏற் டுகிற வேலையின்மையும் சே ர்ந்து உண்டாகிற மூடிவே. நீங்க ள்பல நாள் பட்டினி கிடந்தீர்களா ல்கடவுள் காற்றுப்பறக்கிறார். கடவுள் என்பது செல்வந்தர்க ளது பொழுது போக்கு என்ப தும், ஏழைகளின் மலிவுட சுவுக ரியமுமான போதை வஸ்து என் பதும எனக்குத்தெரியும். உண வில்லை, கடவுளில்லை. ஒய்வில்லை, கடவுளில்லை, என்ற இந்த உண் மைகளை, வறியனுகி, அதிக தன் பங்களை அநுபவித்த பிறகேநான் அறிந்து கொண்டேன்.

ஓர் வயோதிகாது:- நான் ஏழை, எப்போதும்ஏழை. ஆனால் கடவுளைப்பற்றி எண்ணம் உண் டாகக கொண்டேயிருக்கிறது. சாகின்ற நிலையிலுங்கூட அந்த எண்ணம் உண்டாயிற்றே.

சாது:- அது இயற்கைதான் ஒரு சிலர் ஏனையோரை கடவுள் என்ற மதவை உண்ணும்கெட்ட பழக்கத்தில் ஆழ்த்தி விட்டார் கள். இறக்கப்போகும மனித னைக்கூட குடிக்காமல் தடுக்க இய லாது. இந்தக் கொடிய பழக் கத்தைவிட ஒரே ஒரு மருந்து தானுண்டு. அது தான் ஞானம், உணவு, ஒவ்வொரு மனிதனின் உரிமை என்ற ஞானம். ஒவ்வொ ருவரும் அந்த உணவுக்காக வண ங்குதலாகாது. ஆனல் சண்டை யிட்டு பெறவேண்டுமென்ற ஞா னம்.

ஜனங்கள்:- பெரியோர்களெல் லாம் அதற்காக வணங்கி, விர தமிருந்து தவமிருக்க வேண்டுமெ ன்று சொல்லியிருக்கிறார்களே.

சாது:- தெய்வ வணக்கம்..... மது.....ஆம் அதிக நாளாய் நாம அந்த மயக்கத்தில் இருந்த வி டோம். சகோதரர்களே! சகோதரிகளே! உண்மையாய்ச் சொல்லுங்கள். நீங்கள் வாழ்நா ளெல்லாம் தெய்வ வணக்கம் செ ய்கிறீர்களே, கடவுள் எப்போதா வது செவிசாய்த்துஉங்கள்முறை யீட்டை கேட்டதுண்டா? செல் வந்தர்கள் அதிகமாககோவிலுக்கு ப்போவதையும்தெய்வத்தைவண ங்குவதையும் பார்த்திருக்கிறீர் களா? அப்படிப்போனலும் சகல ஆடம்பரங்களோடும் தங்களை ஏனையோர் நன்குமதிக்கவேண்டு மென்னவேர் கொளரவிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடேயே போகிறார் கள் என்பதும் தாங்களறியீரா?

புரோகிதர்கள்:- அவனைப்பிடி த்து வெளியே தள்ளுங்கள் பை த்தியக்காரனைப்போல உழறு கிறான்.

சாது:- நாங்கள் பசியாய் இருக் கிறோம் உணவுவேண்டும் இதைக் கேளுங்கள் (விக்கிரகத்தை சுட்டிக்கா ட்டி) கேட்கிறோம்.

புரோகிதர்கள்:- உன்னுடைய மூட்டாள் தனத்தை யெல்லாம் அவிழ்த்து விடாதே, மரியாதை யாகப் போய்விடு, இல்லாவிடில் போலீசாரைக் கூப்பிடுவோம். நீ கடவுளையும், எங்களையும் அவ தூறுப் பேசுகிறாய்.

ஜனங்கள்:- அந்தோ! அநியா யம், அவரைப் பிடித்துக் கைதி யாக்கி அடைத்து விடுவார்களே.

சாது:- அறியாமையிலும்,மூட நம்பிக்கையிலும் உழலும உங்கள் சிறையைவிட வேறு சிறை இரு க்கமுடியுமா? புரோகிதர்களே! நீங்களும உங்கள் கடவுளும் பே டிகள், சக்கியற்றவ கள். உங் களை நீங்களே காப்பாற்றிக்கொ ள்ள முடியவில்லை. போலீஸ் உதவி கொண்டு உங்களைக் காப் பாற்றிக்கொள்ளப்பார்க்கிறீர்கள்.

சாது:- பசியால் வாடும் ஜனங் களே! புரோகிதர்கள் பரமபரை ஜாலவித்தைக்காரர்கள். உங்க ளுடைய அறியாமையையும், மூட நம்பிக்கையையுமே கருவி யாகக்கொண்டு அவர்கள் உங் களிடம் பணம் பறித்து, உண்டு கொழுத்து வருகிறார்கள். இந்த ஜன்மத்தில் நன்மை செய்தால் அடுத்த ஜன்மத்தில் பலன் அது பலிக்கலாம் என்கிறார்கள். முன் இறந்தவர்கள் யாரவது வந்து நம்மிடம் அதைப்பற்றிச் சொல் லியிருக்கிறார்களா? கிடையவே கிடையா. இன்று கஷ்டப்படுகிற நமக்கு இன்றே பரிகாரம் கிடை க்கவேண்டும். இல்லையேல் அது மோசமும், மூட்டாள் நம்பிக்கை யுமே யாகும். அதை நீங்கள் என் நம்பவேண்டும்.

புரோகிதர்கள்:- நாங்கள் உன் னை சபிக்கிறோம்.

சாது:- புரோகிதர்கள் ஆசீர் வதிக்க அறியார்களே!

புரோகிதர்கள்:- நீ அதிகம் பேசுனல் கடவுள் உன்னைக்கொல் வார்.

சாது:- உமது கடவுளை நான் கொல்வேன்.

(சாது ஓரே பாய்ச்சலாய் பாய்ந்து விக்கிரகத்தை உடைக்க, அதன் கீழ் தங்க நாணயங்கள் குவிந்து கிடக்கின்றன.)

புரோகிதர்கள்:- நாம் மோசம் போனோம், நமது ரகசியமெல் லாம் வெளியாய் விட்டன. நமது பிழைப்பே போய்விட்டது.

சாது:- (ஜனங்களைப் பார்த்து) இப்பொழுது உங்கள் கண்களி னல் உண்மையைக் கண்டுணருங் கள். அதோ தங்க நாணயங் களைப் பாருங்கள்.

ஜனங்கள்:- ஆ என்ன ஆச்சரி யம்! தங்க நாணயங்கள்!

சாது:- ஒவ்வொரு நாணய மும், நம்முடைய சத்தத்தின் தொனிகளாகும்.

சாது:- நீங்கள் வணங்கிய விக் ரகத்தின் கீழ் என்ன இருக்கிறது? உண்மையை இப்போது அறிந் தீர்களா? (மன முடைந்த சிரிப்பு டன் எல்லோரும் வெளியே வரு கின்றனர்.)

"ஆனந்தா"

கோட்டாறு.

சுயமரியாதை வாசிப்புசாலை.

ஷேவாசகசாலையின் மாதாந்திரக் கூட்டமொன்று 8-1-32ந்தேதி திரு. திரவியம் பி. ஏ., பி. எல், அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் திருவாளர்கள் ஆ. இ. பெரு மாள் அவர்கள் 'காந்தியம்' என்பது பற்றியும் மற்ற அன்பர்கள் ஷேயார் சொறபொழிவையொட்டிப் பேசிய பின தலைவர் முடிவுரையுடன் கூட் டம் கலைந்தது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

'காந்தியும்' 'சங்கும்' மறைந்த மாயம்.

"தேசபக்தன்" வீரம்.

11-1-32க் தேதி வெளியான "தேசபக்தன்" தலையங்கம்.

1. "சர்க்காரே! உனக்கு மானமுண்டா? வானத்தைப் பார்க்கவேண்டாம். மேலே வானம் இருப்பதை நாம் அறிவோம். உனக்கு மானம் இருக்கிறதா என்றே நாம் கேட்கிறோம். இந்தியரைக்காப்பாற்ற இந்தாட்டிற்கு வந்திருப்பதாய்ச் சொல்லுகிறாய். ஏழை இந்தியருக்கு நீ தான் காரியன் என்று பேசுகிறாய். இந்தியாவின் நாணயத்தை தூக்கிப் பிடித்திருப்பதாய்ச் சொல்லுகிறாய். இவை யெல்லாம் உண்மைதானா? உண்மையானால் உனக்கு மானமில்லை. எனெனில் நீ சொல்லுகிறபடி நடக்கவில்லை. அல்லது நீ பொய் சொல்ல வேண்டும்" என்று 'சர்க்காரே, உனக்கு மானமுண்டா' என்ற தலைப்புக்கொடுத்து, 14-9-31ல் வெளியான "காந்தி" பத்திரிகையின் முதல் பக்கத்தில், அதன் ஆசிரியர் எழுதியிருந்தார்.

2. 'ஒரு போலி பக்தன் தினசரிகோவிலுக்குச் சென்று அப்பனே! இந்த மாயா உலகத்திலிருந்து என்னை விடுவித்து சீக்கிரம் உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளமாட்டாயா என்று வேண்டிக்கொண்டிருந்தான். இவன் போலித்தனமாய் பிராத்திக்கிறான் என்பதையும், ஊராரை ஏமாற்ற பாசாங்கு செய்கிறான் என்பதையும் தெய்வம் அறியும். இருந்தாலும் உலகத்திற்கு அதைக்காட்டவேண்டி ஒரு யுக்தி செய்தது. ஒரு நாள் அவன், திருவடியடைய அனுயாச மரணம் வேண்டுமென உருக்கமாய்ப்பிராத்தனை செய்யும் போது, திடீரென்று தெய்வம் "தந்தோம்" என்றது. இதைக் கேட்டதுதான் தாமதம். உடனே பக்தன் பிடித்தான் ஓட்டம். ஓசே ஓட்டம் மாய்க்குதிக்கால் பிடரியில் பட ஓடியே போய் விட்டான்'. இந்தக்கதை 24-10-31 காந்தி பத்திரிகையின 1ம் பக்கத்தில் படம் போட்டு 2ம் பக்கத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

3. 6 மாதம் சோறு போட்டால் மலையைத் தூக்குகிறேன் என்ற சோம்பேறியை நம்பி ஒரு நாட்டில் 6 மாதம் சோறு போட்டு, பின் மலையைத்தூக்தப்படி கட்டளையிட்டால், எல்லோரும்மலையைத்தூக்கி என் தலையில் வைத்தால் பின் அதை தான் சுமக்கிறேன் என்றாலும். இதுவும் ஒரு படத்தின் மூலம் "காந்தி" பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

4. கடைசியாக வெளிவந்த 7-1-32 "காந்தி" பேப்பரில் 206 பக்கத்தில் 'சட்டங்கள் ஆயிரங்கள்-வரினும் சட்டை செய்யாதாடா நீ; இட்டங்கொள் சாந்தவீரன்-காந்திபோன் இட்டதுசட்டமா, என்ற பாட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது. முடிவாக 8-1-32ல் வெளியான "வங்வேமாதரத்தில்" கீழ்கண்ட அறிக்கை காணப்பட்டிருக்கிறது.

5. "இந்திய சர்க்காரிடமிருந்தும், சென்னை சர்க்காரிடமிருந்தும் சென்னை போலீஸ் கமிஷனர் மூலமாக நமக்கு உத்தரவுகள் வந்திருக்கின்றன. சட்ட மறுப்பு இயக்கத்தை ஆதரித்து எழுதக்கூடாதென்று அவற்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மானங்கெட்ட உத்தரவுக்குக்கீழ்ப்படிந்து "காந்தி'யை நடத்த நாம் இஷ்டப்படவில்லை. ஆகவே இன்று முதல் "காந்தி" பத்திரிகை பிரசுரிப்பதை நிறுத்திவிட்டோம். தேசத்திற்கு சுதந்திரம் ஏற்பட்டு, பத்திரிகைகள் தங்கள் கொள்கைகளை கடுகளவு தடையுமில்லால் வெளியிடலாம் என்ற நிலைமை ஏற்படும் போது, "காந்தி" மறுபடியும் வெளிவரும்."

ஓப்பம்.

டி. எஸ். சொக்கலிங்கம்,
"காந்தி" ஆசிரியர்.

பொது மக்கள் அறியவேண்டியது என்ன என்பதையும். பொறுப்பில்லாதவர்களாலும், அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளாலும், எப்படி பொது ஜனங்கள் தவறுதலான வழியில் தூண்டப்பட்டு நடத்தப்படுகிறார்கள் என்பதையும், தன்னல் பின் பற்றி நடந்து காட்ட முடியாத வைகளை தலைவர்களோ அன்றி பத்திரிகாசிரியர்களோ பிறருக்கு உபதேசம் செய்ய முன் வரக் கூடாது என்பதையும், விளக்க வேண்டியே இவைகளை இன்று நாம் இங்கே மாதிரிக்காகபிரசுரிக்குப்படி நேர்ந்தமைக்கு மிகவும் வருந்துகிறோம்

1. காங்கிரசின் கட்டளைகளையும், காந்தியின்உபதேசங்களையும் தலைமேற்றாங்கி சத்தியாக்கிரகத்தையும், சட்ட மறுப்பையும் ஆதரித்து ஜனங்களையும் அதிலிறங்கும்படி தூண்டி, 'காங்கிரஸ்பத்திரிகைகள்' என்று தம்மை விளம்பாரமும் படுத்திக் கொண்ட "சுதந்திரச்சங்கு" "காந்தி" போன்றபத்திரிகைகளின்சொந்தக்காரர்களும், அதில் கூலிக்கு மாரடிப்பது போல் எழுதிவந்த ஆசிரியர்களும், கேவலம் ஒரு பேப்பரில் எழுதியனுப்பிய உத்தரவிற்கே கடுங்கி சட்டத்தை மீற இந்தப் பயம் பயந்து பேப்பர் போடுவதை நிறுத்தி விடும்போது, இவர்களுக்கு மானமுண்டா என்று சர்க்கார் கேட்காவிட்டாலும் வாசகர்களாவது கேட்டுத்தெரிந்து கொள்ளட்டும்.

2. வட்டமேஜை மகாநாடு வெறும் செத்த குதிரை, அதை எங்களுக்கு வேண்டாம். உடனே சட்ட மறுப்புத்தான் வேண்டும் என்றெழுதிய 'காந்தி' 'சங்கு' ஆசிரியர்களுக்கு, அதிகார தெய்வம் 'தந்தோம்' என்று ஒரு உத்தரவைக்கொடுத்தது. போலி பக்தனுவது கோயிலை விட்டு ஓடினான். இந்தப் போலி ஆசிரியர்கள் இருந்த இடத்திலிருந்தே 'காந்தி'யையும் 'சங்கை'யும் கொன்று தாங்களும் செத்தார் போலாயினர்.

3. 'காந்தி' பத்திரிகைகளை ஆதரியுங்கள். சீக்கிரம் சட்டமறுப்பின் மூலம் சுயாராஜ்யம் வாங்கித்தருகிறோம். 'தேச பக்தன்' மட்டும் சென்னை சர்க்கார் சி. ஐ. டி. இலாக்காப்பத்திரிகை. அதன் குறும்பையும், புரளியையும் நம்பி மோசம் போகாதீர்கள், என்றெழுதிவந்த 'காந்தி'யை நம்பி, ஏமாந்துவந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள், இன்று 'காந்தி' ஆசிரியரை நோக்கி, சட்ட மறுப்பு மலையைத் தூக்குகிறேனென்றீரே? என் தூக்காமல் தூங்குகிறீர் என்று கேட்டால், நீங்களெல்லாம் சட்டத்தை மீறி அம்மலையைக் கடைசியில் தம் தலைமீது வைத்தால் அப்பொழுது, தான் தூக்குவதாய்ச் சொல்வார்.

4. 'சட்டங்கள் ஆயிரம் வரினும் நீ சட்டை செய்யாதடா' என்ற 'காந்தி'யும், உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும், அச்சமென்பதில்லையென்ற 'சங்கும்', தேசத்திற்காக உடல், பொருள், ஆவி யெல்லாம் தத்தம் செய்ய வேண்டுமென்றெழுதிய ஆசிரியர்களும், என் சட்டத்தை மீறி தமது பத்திரிகைகளை அச்சிட்டு, அதன் மூலம் வரும் பலன்களை அனுபவிக்கக்கூடாது என்பதைத்தான் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டும். இதன் ரகசியம்:— உத்தரவை மீறி எழுதினால் ஜாமீன் கேட்பார்கள். பின்னும் எழுதினால் பெருந்தொகை கேட்பார்கள். அதன் பின்னும் எழுதினால் பறிமுதல் செய்வார்கள். செய்யட்டுமே. அதுவும் பொது ஜனங்களுடைய ஆதரவினால் தேடியிலாபத்தைக்கொண்டு நடப்பதானே என்றாலும் பொருள் கைக்கு வந்து விட்டபிறகு, அது பிசைவேட் சொத்துதானே. அதை எப்படித்தான் இழக்க முடியும்? ஏட்டுச்சுரக்காய் ஏமாந்தவர்களுக்கு, வீட்டுச்சுரைக்காய் வேதாந்திக்கு என்ற நியாயத்தின் பேரில், கேவலம் நாட்டிற்காக அச்சாபீசையும் தறக்கமனமில்லாத இவர்கள், இனி, எப்படித்தான் சட்டத்தை மீறி உயிரையும் விடப்போகிறார்களோ தெரியவில்லை. ஒரு சமயம் நாம் இதை எழுதியதற்காக அவ்வாறு செய்து கொண்டால் அதையே நாம தேசத்திற்காகச் செய்த பெரிய சேவையாகக் கொள்வோம்.

5. முடிவாக:— ஓடுகிற ஒருவன் தூத்தகிறவனைப்பார்த்து, தன் ஓட்டத்தைப் பிடிக்க முடியாமையால் தான் வெற்றி யடைந்து விட்டதாகக் கூறும் முட்டாள் தனத்தையொத்து, 'இந்த மானங்கெட்ட உத்தரவிற்கு நாம் கீழ்ப்படிய முடியாது' என்று சொல்லிக்கொண்டே, "மகள் பதவிசு கிட்வா என்றால் படுத்துக்கொள்வான்" என்பது போல், உடனே அவ்வுத்தரவிற்குக் கீழ்ப்படிந்து நடப்பதை விட, இன்னும் அதிகமாகப்படிந்து 'காந்தி'யையே நிறுத்திவிட்டது, அதை விட மானங்கெட்ட வாழ்வல்ல வா என்றுதான் நாம் கேட்கிறோம். "தூக்கிப் பிடித்தக் கொள் பிணைகாடாய் வெட்டித் தள்ளுகிறேன்" என்றானும் ஒரு பெரிய அசகாய சூரன். அது போல் 'காந்தி' 'சங்கும்' யுத்த காலத்தில் நாங்கள் ஓடி ஒளிந்து கொள்ளுகிறோம். மறுபடியும் சுதந்தர இந்தியாவில் எங்களை யார் என்று கேட்பாரில்லை விட்டால், தோன்றி தொண்டாற்றுகிறோம் என்று விடைபெற்றுக்

கொண்டு மறைத்து விட்டன. கைலாச பதவிக்குப் போனபின் டாக்டர்களின் உதவி யென்னத் திற்கு. அதையறியாமல் சுதந்தர இந்தியாவில் 'காந்தி'க்கும் 'சங்கிற்கும்' என்ன வேறு பென்பது நமக்கே விளங்கவில்லை. உழுகின்ற வேளையில் ஊருக்குப் போய் அறுக்கின்ற வேளையில், அரிவாள் கொண்டு வருவதற்கா? இதைவிட இன்னொரு அயோக்கியத்தனமும் நடைபெற்று வருகின்றது. தமிழ் 'காந்தி'க்குத் தான் இவ்வுத்தரவு மானங்கெட்டதாகத் தோன்றியதே தவிர, இதன் சொந்தக்காரர் இவ்வுத்தரவுக்குக் கீழ் படிந்து நடத்தும் இங்கிலீஷ் 'காந்தி'க்கு அது மானமுள்ளதாகவே தோன்றுகிறது போலும். தவிர சிரு. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை இந்த மானங்கெட்ட உத்தரவுக்கிணங்கி வந்தே மாதரத்தை இன்று தாமே அச்சிட்டு பிரசுரித்துக்கொண்டு வருகிறார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது மானங்கெட்ட வாழ்வு எது?" என்பது எமக்கே விளங்கவில்லை.

தவிர காந்தியின் பெயரையும், காங்கிரசின் பெயரையும் இதுவரை பிழைப்பிற்காக வேண்டியுபயோகப்படுத்திக்கொண்டு வந்த போலித் தலைவர்களின் வேஷம் வெளிப்பட்டு ஜனங்கள் உண்மையுணருவதற்கு இவ்விடக்குமுறை மிகவும் உதவியாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.....இப்பொழுதே 'நாமார்க்கும் குடியல்லோம், நடனை யஞ்சோம்' என்ற அன்பரும், "இதந்தரு மனைவினீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும் சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே" என்ற நண்பரும் தம்முடைய தலையங்கத்தை மறைத்துக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். மகாத்மா காந்திக்கும் மற்றவர்களுக்குமிருக்கும் வித்தியாசம் என்னவெனில், காந்திஜீ தெருப்பு சுயநிர்திருக்கிறதென்று நம்பினால், தானே முதலில் அதில் கையிட்டுப் பார்ப்பார்; மற்றவர் பிறர்கையை அனலிலிட்டுப் பின் சந்தேகம் தெளிவர். இதை மகாஜனங்கள் சீர் தூக்கிப் பார்த்து, சொன்னபடி செயலிலும் காட்டும் உண்மைத்தலைவர்களைப் பின்பற்றி நடப்பார்களாக.

நம்மைப்பற்றி ஒரு வார்த்தை. நாம் எப்போதும் போலவே தேசிய முறையில் எக்கக்ஷியிலும் சேராது, எவருக்கும் அஞ்சாது, பொதுவியிருந்து நாட்டிற்குவேண்டிய நற்பணியை, நம் புத்திக்குச் சரி யென்று பட்டதைச்செய்து வருவோம். தனித்த மனிதரோ, கட்சியோ, சர்க்காரோ செய்வது நல்லதாயின் நம்மால் போற்றப்படும். அல்லவாயின் பலமாய்க் கண்டிக்கப்படும். தானே சட்டத்தை மீறிச் செல்லத் தயாராய் இல்லாதபோதுபிறரையும் அவ்வாறு செய்யும்படி தூண்டுவது 'தேசபக்தனு'டைய வேலையல்ல. அவரவர்கள் தங்களுக்கு உசிதமானபடி நடந்து கொள்வதில் 'தேசபக்தன்' குறுக்கிடப்போவதில்லை. சர்க்கார் அடக்கு முறையைப்பலமாய்க் கண்டிப்பதுடன், நாம்எப்பொழுதும் அமைதியையும், சமாதானத்தையும், சுதந்திரத்தையும், நீதியையும் நிலை நிறுத்தப்பாடுபட்டு வருவோம். இதனால் நமக்கு மறுமுறையும் சிறைவாசம் வந்தாலும் ஏற்றுக்கொள்வோம். அச்சுச்சட்டப்படி ஜாமீன் கேட்டாலும் மறுத்து பேப்பரை நடத்துவோம். பறிமுதல் செய்தாலும் நமது சொத்துப்பெயரிலேயே, நமக்கே உரியதையுள்ள அச்சுக்கூடத்தையும், மெஷின்களுள்பட இழக்கத் தயாராயிருக்கிறோம். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி, மக்களை நாம் பின்பற்றத்தயாராயில்லாத மார்க்கத்தில் தூண்டுவிட்டு, ஏமாற்றுமைக்கு வாசகர்கள் நம்மை மன்னிப்பார்களென்று முழுதும் நம்புகிறோம்.

[ம்ம யக்கத் தொடர்ச்சி]

கள் யாருடையது. தாழ்த்தப்பட்டு கிடக்கும் எம் சகோதரர்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ மழையிலும் வெயிலிலும் காற்றிலும் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்த பணத்தைக்கொண்டு ஆசாயமளாவ கட்டிய ஆலயங்கள் தானே. இவை எந்த வைதிக பார்ப்பானுவது தனது சொந்த உழைப்பினால் ஆலயங்கள் கட்டினான் என உருதிகூற முடியுமா? இன்று சாமியின் பெயரைச்சொல்லி வயிறு வெடிக்கத் தின்று கொழுத்து வேசியரிடம் இன்பம் அனுபவித்து நோய் வாய்ப்பட்டு தங்க பஸ்பம், தாள கபஸ்பம் சாப்பிடுவது எந்த பார்ப்பான் உழைத்த பணம்? எனக் கேட்பதற்கு யாராவது தக்க பதில் கூறமுடியுமா? எனப்பந்தயங்கட்டி கேட்கின்றேன்.

சில ஆஸ்திக அறிஞர்கள் "கோவிலகளால் பலன் ஒன்றும் விளையாது என்பது அவ (சுயமரியாதைக்கார) ர்களது உண்மைக் கொள்கையானால் பஞ்சம சகோதரர்களை கோயிலினுள்ளே புகும்படி செய்து உலகம் விளைப்பது எதற்கு என்பது தெரியவில்லை. பயனில்லாத செயலில் இவ்வளவு முயற்சியும் பிரயாசையும் எதற்காக?" என வினவுகின்றார்கள். இவர்களுக்கு எவ்வளவு விளக்கி கூறியும் எழுதியும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று. சுயமரியாதைக்காரர்கள் கோவில் புண்ணியஸ்தலமென்றே அங்கு தெய்வங்களிருக்கின்றது அதை வணங்கினால் மோக்ஷத்திற்குப் போய் விடலாமென்றே கனவிலும் கருதினதில்லை. எந்த பொதுவிடத்திலும் ஒரு ஜாதிக்காரர்கள் செல்லலாம், மறறொரு ஜாதிக்காரர்கள் செல்லக்கூடாது என்றால் அங்குசமத்துவம்போர்தொடுத்து எல்லா மனிதர்களுக்கும் பொதுவிடமாகி சொத்துரிமை அளிப்பதுதான் சுயமரியாதைக்காரர்கள் நோக்கமென்பது ஆஸ்திக அறிஞர்கள் செவிட்டுக்காதில் நுழையட்டும்.

எமகள் தலைவருக்கு இன்னும் இருபதினாயிரம் இரத்தந்தோய்ந்த கடிதங்கள் எழுதுங்கள். கொடும்பாவி கட்டி இழுங்கள்! எங்களை நஞ்சூட்டிக் கொல்லுங்கள்! தடி கொண்டு தாக்குங்கள்! உயிரைக்குருப்புக்கட்டியென நினைத்துக்கொண்டு எங்கள் தலைவர் இவ்வியக்கத்தை ஆரம்பிக்கவில்லை, உடல் பொருள் ஆவி மூன்றிலும் சிறந்ததன்றே சுயமரியாதை. சுயமரியாதை யற்றவனே மனிதன் என்று கூறுவதைவிட மிருகங்கள் என சாதாரணமாய் கூறலாம். சிலர் சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன் வாழ்ந்தவர்களெல்லாம் மிருகங்களா? என வினவுகின்றார்கள். ஆம் என்றுதான் சொல்லுகின்றோம். மிருகங்கள் செல்லும் ஆலயங்களிலும் வீதிகளிலும் செல்ல மறுத்திருப்பதை சகித்துக்கொண்டு வாழாவிருந்தவர்கள் மிருகங்களை பார்க்கிலும் இழிவல்லவா எனக்கேட்பதற்கு பதில் கூறுங்கள்.

பிழை திருத்தம்.

10-1-32ல் வெளிவந்த "குடி அரசில்" மாலை 7, மலர் 37, பக்கம் 14ல் வெளியான திருப்பூர் டி. மு. கோர்ட்டு S. C. 507 of 31ல் விளம்பரத்தில் வாதியின் தகப்பன் பெயர் "நஞ்சப்ப செட்டியார்" என்றும் "1932 ஜனவரி மாதம் 12 தேதி" வாய்தா என்பதை "1932 ஜனவரி மாதம் 22 தேதி" என்றும் திருத்திக்கொள்ளவும்.

உயிர் போக்கும் பொங்கல் பண்டிகை.

(ஜோலார்பேட்டை தோழர். வி. பார்த்தசாரதி)

பண்டைக்காலத்தில் நாகரீக மற்ற வாழ்ந்து வந்த சமது முன்னோர்களால் கொண்டாடப்பட்டு வந்-வருகிற அருத்தமற்ற பொங்கல் பண்டிகையை இந்த இருபதாவது நூற்றாண்டில் சுயராஜ்யம் கேட்கும் இக்காலத்து ஜனங்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறதென்றால், மில், மேயோவைப்போலிருக்கும் மேல் நாட்டு அறிவாளிகளால் நகையாடமலிருக்க முடியுமா? என்பதை யோசிப்போம். தமிழ் தை மாதம் 2ந் தேதியன்று அவரவர்கள் எருது பசு, கன்று, எருமை, ஆடு, முதலியவைகளைத் தண்ணீரில் குளிப்பாட்டி, மஞ்சள், குங்குமம் முதலில் வைத்து ஓர் பெரிய பட்டியில் அடைத்து, பட்டியின் நடுவில் பெரிய மண்பானைகளில் சாதம் செய்து படையல் போட்டு, பசு மூத்திரத்தை எல்லாவற்றின் மேலும் தெளித்து மேளம் அடித்து, தாரத்தாலது வழக்கத்தின் கீழ் வருகிறது. இதற்குக்காரணம் வருடமொருநாள் அவைகளித்து வேடிக்கை செய்தால் கடவுள் வந்துபார்த்து "மனிதர்களால் இடைஞ்சலில்லை; சுகமாய்த்தான் வைத்திருக்கிறார்கள்" என்று மிருகங்களுக்குச் சொல்லிவிட்டுப் போய் விடுகிறாரும். 364 நாள் கஷ்டப்படச் செய்து அதனுடைய இரத்தத்தை உருஞ்சும் கன்றி கெட்ட மனிதர்கள் 365ம நாள் சுத்தம் செய்து, அலங்கரித்து, மொத்தை சாதத்தையும், பூசனிக்காய் குழம்பையும், படையல் போடும் சமயத்தில் ஆகாயத்தில் அந்தரமாய் தொங்கிக்கொண்டு, வேடிக்கை பார்த்து விட்டு யாருக்கும் தெரியாமல் மிருகங்களுக்கு அதிதிர்ப்புக்கொடித்து விட்டுப் போகும் கடவுளை மூட்டான் என்றும் குருடனென்றும், பைத்தியக்காரனென்றும் சொன்னால் அறிவாளிகள் கோபித்துக்கொள்ளமுடியுமா? இந்த இருபதாவது நூற்றாண்டில் நாகரீகமாய் வாழும் ஜனங்களால் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையின் காரணம் கேட்டால் எங்கள் முன்னோர்கள் பழக்க வழக்கங்களை மறுவ விடாமல் காப்பாற்றினோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகின்ற பிரகாரமாவது நடக்கின்றார்களா என்று பார்த்தால் அதுவுமில்லை. இப்பொங்கல்பண்டிகை ஊருக்கு ஊர், விதவிதமாகக்கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னட்டப்பணக்காரர்கள் இப்பண்டிகைக்காகவே ஆலைக்கொல்லும்படியான ஒரு கெட்ட மூர்க்க குணமுடைய எருதுகளை நன்றாய்த் தீனி கொடுத்து, நிமிர் எற்றி தை மாதம் 2 தேதியு

ன்ற எதன் கொடிலும், தெற்றி யிலும், விலேயுள்ளகைகளையும், கல் நிரைகளையும், அணிக்க, கழுத்தி லும், மூக்கிலு கயிறில்லாமல் விட் டிட்டுத் தைரியசாலிகள் யாராவது கழற்றிக்கொள்ளலாம் என்ற தெரி வித்து விலைய வழக்கமாக விருக்கி றது. அப்படி யாராவது நகையை கழற்றிக்கொண்டால் மூட்டான் எரு து என்றும், கழற்றும் போது அவ னை மூட்டிக்கொண்ற விட்டு எஜமா னன் வீட்டிற்கு நகையோடு போய் விட்டால் சந்தேகப்பட்டு எருதை முத்தமிட்டு கன்றுய்க்கொழுக்க வை தது, மறுவருஷம் விலையை வழக்க மாம். அந்தோ பரிதாபம்! என்னே இவர்களின் கூற்று! இது பெருங் கொடுமையென்ற வர் கள் வேண்டுமென்றே ஜல்லிக்கட்டு ஜில்லாவில் கொண்டா டும் பொங்கல் பண்டிகையின் அரிய யகையைப் படிக்குல ஒவ்வொருவரும், மனங்கலங்காமலும், கண்ணீர்விடியா மலும் இருக்க முடியாது. எருதும் கொண்டாடுவது பெரும் பொங்கல், பட்டிப்பொங்கல், கன்னிப்பொங்கல், எல்லு மூன்றுநாள்தான். வட ஆற் காடு ஜில்லாவில் தை முதல் வை அமாவாசை வரையில் கொண்டாடப் பட்டு வருகிறது. எப்படிக்கொண் டாடப்பட்டு வருகிறது. என்றால் பெ ரிய வீதிகளில் இருபக்கமும் கட்டை வண்டிகளை நிறுத்தி மத்தியில் எழை களுக்கு கள்ளோபாத்து நிறுத்தி கை ருய் நிலை கொழுத்து திகிர வறிய எருதுகள் கழுதையில் பெரிய வடக் கயிறு களைக்கட்டி மூக்கில் இரத்தம் வருமபடி செய்து, தலையில் மயிலிற கினால் செய்யப்பட்ட பெரிய விசிறி யை கட்டி சரிகையினால் பட்டுத்துணி யில் பூவேலை செய்து மேலே போர் த்தி, கழுத்தில் சலங்கைகள் கட்டி, வால்பகுதி வெங்காய டப்பாசும், பாணமும் வெடிக்கச்செய்து மேளம் அடித்து ஒரு மூனையிருந்து மற்றொரு மூனைக்கு தாக்கிவார்கள். சகோ தரர்களே எருது மிரண்டு ஓடும்பொ ழுது எதிரிலிருக்கும் ஜனக்களை கொம்பினால் குத்தமபொழுது நிறப் பது அதிகம், வடக்கயிறில்சிக்கி இறப் பது அதிகம். எந்த எருது அதிகமாக மனிதனைக் கொல்லுகிறதோ, அந்த எருதை அதிக பணங்கொடுத்து வா ங்கி அதிகரிகரும், அர்த்தமற்றதும், அநியாயமான எருதுகளைக்கொ ண்டாடும் நமது சகோதரர்களை அறி வாளிகள் எவ்வாறு சொல்ல முடியும்? இந்த இருபதாவது நூற்றாண்டில் ந க ரீகத்திலும், அறிவிலும முற்போக்கு அடைந்திருக்கும் சகோதரர்களால் கொண்டாடப்படும் எருதுகளால் காயப்படும் அறிவற்ற எழைச்சகோத ரர்களுக்கு அதேயிடத்தில் சிகிச்சை யும் செய்து வரப்படுகிறது. வாச கர்களே இவர்களுடைய அறி யாமைக்கு யார்தான் வருந்தா மலிருக்க முடியும். இறப்பவர் மனை வியார்கள் அநியாயமாய் தாலி அறுப் பதையும் கண்டு மனமிறங்காமல் இக் கொடிய எருதுக்கட்டைக்கொண்டாடு மதநடுநிலைமையைக் கொண்டு இயக்கம் எவ்வாறிலும் தேசிய இயக்கமாகவேயாகாது.

ஜூர். கே. வரண்முகம்.

ஃஃ ஃஃ

மக்களைக்கோவில்களும், புரா ணங்களுமே அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்து கின்றன.

புத்தர்.

ஃஃ ஃஃ

போலீஸ் சேவகன் சட்டை போட்டுத் தொப்பி வைத்திருப் பதில் எவ்வளவு தத்துவார்த்தம் இருக்கிறதோ அவ்வளவுதான் ராமம், விபூதியிலும் இருக்கிற து.

S. குருசாமி B A.

ஃஃ ஃஃ

கடவுள் என்பது ஒருபெரிய விளம்பரட்டுச்சரமான். சுவர்க்கம் என்பது தின்பண்டங்கள். நரகம் என்பது ஒரு பூச்சாண்டி.

S. இராமநாதன்.

ஃஃ ஃஃ

விதிகளும், ஸ்தாபனங்களும், மனிதனுக்காக ஏற்பட்டவை. மனிதன் அவைகளுக்காக ஏற் பட்டவன் அல்லன். வைவல்யம்.

ஃஃ ஃஃ

ராமன், கிருஷ்ணன், மாடன், காளி முதலியவைகளை வழிபட்டு வருவதனாலேயே நம் நாடு கீழ டைந்து போகின்றது. இவை யெல்லாம் ஒரு சாதாரண வாழ்க் நப்பிழைப்புக் காரர்களாலேயே உண்டாக்கப்பட்டனவாகும்.

மறைமலையடிகள். வேதாசலம்.

ஃஃ ஃஃ

மூடப்பழக்கவழக்கங்களெல் லாம் சங்கிலிபோல் பிணி த்திருப்பதுவரை பொருளாதா ரத்துறையிலோ, அரசியல் துறை யிலோ எத்தகைய முன்னேற்ற மும் அடையமுடியாது.

ஜவகர்லால்.

ஃஃ ஃஃ

கற்பு என்பது, ஒரு பெரு ற்ற புத்தியினால், மனித இய ற்கைக்கு ஒவ்வாத, நினைப்பைத் தருகின்ற பெண்களை அடிமைப் படுத்துவதற்காக ஏற்பட்ட ஓர் ஏமாற்றச்சொல். மிஸ். கமலம்.

ஃஃ ஃஃ

கர ச்சியிலுள்ளவர்களுக்குப் பிள்ளை இல்லையானால், காசிக்குப் போகவேண்டுமாம். காசியிலுள்ள வர்களுக்குப் பிள்ளை என் இல்லை என்றால் கர்மபலனும்.

எஸ். ஆர். சாமி.

ஃஃ ஃஃ

ஜாதி வேற்றுமை தொலைந்தா லன்றி நாடு நலமடையாது. நமது நாட்டின் விடுதலை ஜாதி வேற்று மையழிவதனாலேயேயுண்டு என் பதை உணருங்கள். இந்திராணி.

ஃஃ ஃஃ

மனிதனின் அறிவைக் கெடு கும், மதபைத்தியத்தை வளர்க் கிறவர்கள், மகாத்மாக்கள் அல்ல.

ஊ.பு.ஷ.சௌந்திரபாண்டியன்.

ஃஃ ஃஃ

அந்திய ஆசாங்கத்தின் தீமை ஒரு பெரிதல்ல. பகுத்தறிவின் மையும், மூட நம்பிக்கையும், அநி யாயபுத்தியும், ஜாதி துவேஷ மும், மதவெறியுந்தான், நமக்குப் பெரும் விரோதிகள். இவை களின் தீமையே பெரிது.

கமி. ரவீந்திரர்.

ஃஃ ஃஃ

மறியல் செய்வதினாலேயே குடி நின்றுவிடும் என்று கருது வது தவறு. குடி நின்றபோ வதினாலேயே, சுயாஜ்யம் வந்து விடாது. குடி கொஞ்சமாக இரு ந்தகாலத்தில் தான் இந்நாடு அர சியல் சுதந்தரத்தை இழந்தது.

பி. வரதராஜலு நாயுடு.

ஃஃ ஃஃ

கற்றபெண்கள் கற்புநிலைதவறி, கணவர்களைக்காதலனால்; கல் வாத மகளிர் அனைவரும், கற்பு நிலை பிறழாதும், கணவர்களையும் நடக்கின்றனரா?

ஈ. ஜூர். அங்கப்பா.

ஃஃ ஃஃ

நிரா. காந்தியிடமிருந்து முஸ் லீம்கள் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. இந்து முஸ்லீம் ஒற் றுமைக்கு நிரா. காந்தியே கா ரணம். ஈஷம் காந்தியை நான் ஒருவனே எதிர்த்துப் போராட முடியும்.

மௌலானா சௌக்கத் அலி.

ஃஃ ஃஃ

இயந்திர உதவியல்லாது, கை ராட்டினம், தக்ளி, கதர். இவை களைக்கொண்டு முன்னேற முய லுவது அறிவுடமையாகாது.

எஸ். இராமநாதன்.

(தொடரும்.)

அருள் பெருள் மொழிகள்.

(சாக்கோட்டை S. R. சாமி)

மோட்சம் வேண்டியவர்கள் மாயை நீக்கி மோட்சத்திற்கே செல்லட்டும் இவ்வுலக போகங் களை விரும்புகிறவர்கள் சுயராஜ்ய மடையவேண்டுமானால் அதற் குத்தடையாயிருக்கும் தீண்டா மையை விட்டுவிடட்டும்.

கைவல்யம்.

ஃஃ ஃஃ

பெண்கள் எவ்விதக்கட்டுப் பாடுமின்றி, இடுக்கணுமின்றி பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகர்கிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரீக நற்பழுண ர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்நாடே நாகரீகம் பெற்ற நாடாகும்.

வி. கல்யாணசுந்தரமுதலியார்.

ஃஃ ஃஃ

புனர்ஜிதர்கள் நூற்றுக்கணக் கான வருஷங்களாயுள்ள, மூடக் கொள்கை, கொடுமை, இவற்றி னியம்பும் முழுதும் தழுந்தவர்கள் அபிவிருத்திக்கு எதிரிடையாயிரு க்கிற இவர்களை வெறுத்துத்தள் ளுங்கள். இவர்கள் ஒருபொழு தும் சீர்படமாட்டார்கள்.

வீரேசலிங்கம்.

ஃஃ ஃஃ

சுயமரியாதைக்கொள்கைபடி ஆத்மாவே சந்தேகம். காங்கி சின் கொள்கைபடி ஆத்மா, மகா த்மாக்கள் குட்டி மகாத்மாக்கள் உண்டு.

ஈ. வெ. ராமசாமி.

ஃஃ ஃஃ

பவர்களோ என்னவென்று சொல்வ தென்பதை யோசர்களே சொல் லுவர்கள். நமது தேசத்திலே படிக்கா தவர்களும், படித்த பயனும், உண்ண உணவும், உடுத்த உடையும், வசிக்க வீடும், இல்லாமல் வருந்தப்பட்டு வரும் சகோதரர்கள் கோடிக்கணக்காய் இரு ப்பது தர்கர்த்தத்தையில் சிலவு செய் யும், பணக்கார கனவான்களுக்குத் தெரியாமலிருக்குமோ என்ற சந்தேக பட்டு இதை தெரிவித்துக்கொள்ளு கிறோம். எதிர்காலத்திலாவது இக்கொ டிய எருது கட்டை விட்டொழிக்கு மாறு வேண்டிக்கொள்ளுகிறோம். தற் காலம் நமது கனவான்களான பெரிய நகரங்களிலும், பட்டணங்களி லும், எருதுகளுக்கோ, குதிரைகளுக் கோ, வண்டியிழுக்கும்போது காயமி ருந்தால் சொந்தக்காரனை அரஸ்ட் செய்து அபராதம் விதிக்கிறார்கள். மனிதனுக்கும், எருதுகளுக்கும் ஆப த்து உண்டாகும். இக்கொடிய மூட வேடிக்கையிலிருந்து மீட்கவேணு மாய்க் கனவான்களாரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கைத்தொழில் முறைகள்.

இப்புத்தகத்தில் சுமார் 1000 தொழில் முறைகள் விரிவாகவும், புரியும்படியாகவும் அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆரம்பத்திலே யே மாதம் 100 முதல் 500 ரூ. வரையில் சம்பாதிக்கக்கூடிய, போ தனைகள் அநேகம் அடங்கியிருக் கின்றன. ஆகையால் ஒவ்வொ ருவரும் வருவித்து படித்து வே லையில்லா கஷ்டத்தை ஒழித்து தாராளமாக சம்பாதியுங்கள். பெரிய பயிண்டு புத்தகம்.

விலை ரூ. 1—8 0 தான்.

ஏஜண்டு:—

டி. எஸ். நாராயணசாமி,

வடக்கு வீதி, திருவாரூர் S. I.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றபெண்களுக்குக் குழந்தைகள் இல்லாமலிருக்கும் கலியாணத்தையாரும் விரும்பமாட்டார்கள்.

பார்வதிகலியாணம்.

பார்வதிக்குக்கலியாண முடிந்ததும் பிர்மதேவன் மோகிக்கவும் பரமேஸ்வரனுக்கு இருக்கும் ஐந்தாவிலையைப் போல பிர்மாவிற்கும் ஐந்தாவிலையிருப்பதைப்பார்த்து கண்டி பிரமஹத்தி வ்ளவும் அதைத்தொரிந்து பிர்மாவின் தலேபரமேஸ்வரனுல் கிள்ளவும் அந்தகையில் ஒட்டிக்கொள்ளவும் அதில் பனிரெண்டுவருடம் பிச்சையாக்கி உண்ணவும் அதுவுமல்லாமல்சப்தரிஷிகளின் பெண்ஜாதிகளேச்சண்டே பரமேஸ்பரன் மோகிக்கவும் அதைப் பார்வதி தெரிந்து அருந்ததி தவிர ஆருரிஷிகள பெண்ஜாதிகளேப்போல வேஷமிட்டு பரமேஸ்வரனேச்சேரவும், ஆறுமுகத்தோடு சுப்பிரமணியர்பிறக்கவும அதற்குமுன் ஆனே முகப்பின்னே பிறக்கவும அதுதாயைப் போலபெரு கேட்கவும் அதைச்சந்தியில் விடவும் ஆறுமுகமென்னும் பிள்ளேகாட்டில் வேடச்சிபின்னேதிரியவும் அந்தரு த்தம் தாக்காமல் பார்வதி இமயமலே யின்சா லில் வந்திருக்கவும் அங்கொ ருரிஷியக்கண்டு பார்வதிமோகிக்க வும் ஒருபெண்குழந்தை தானேபிறக் கவும் அதற்குகாதம்பரி என்றுபெய ரிடவும் அந்தசபலத்தை கதையாக வெழுதவும் அதை ராஜா அண்ணுமை லேசெட்டியார் சிதம்பரம்பள்ளியில் பள்ளிப்பிள்ளேகளுக்குப் பாடமாக வைத்து பகிரங்கப்படுத்தவுமான பார் வதியின் கலியாணத்தில் நடந்தசம்ப வங்களேச் சுருக்கிச்சொன்னேன். இந்தகலியாணத்தின் தக்கப்பிரகா ரம்வாழவந்தமண மக்களின் தாய் தக ப்பனும்விரும்பார்கள்.

வள்ளிகலியாணம்.

தேவேந்திரன் மகள் தெய்வானே யிருக்க காட்டிலிருந்த ஒரு வேடப் பெண்ணே படமுறுத்தி ஏமாற்றி கலி யாணம் செய்து கொண்டார் சுப்பிர மணியர் அந்தக்கலியாணம் இந்த கால த்துச்சட்டத்திற்கு ஒத்துவராதது அக் தப் பெண்தான் வள்ளியம்மை. இர ண்டு டெண்டாட்டியின் உபத்திரவத் தால் சாகியாகியாய் பெண்ஜாதியை விட்டுவிட்டுப் பழனிக்குஓடிவந்துவிட் டார். அதனுல் வள்ளிக்குப்பிள்ளேயே யில்லே. பிள்ளேயுமில்லாமல் பெண் டாட்டியையும தெருவில் விட்டு மொ ட்டையடித்து சந்நியாகியாய் ஓடிப் போன மருமகனேப்போல மருமக்க ளிருக்க யாரும் விரும்பார்கள். வள்ளி யைப்போல மகளிருக்கவும் விரும்பா கள்.

சுந்தரி கலியாணம்.

சுந்தரி கிருஷ்ணனின் அண்ணன் மகன் தரிமோதனன் மகனுக்கு தீர் மானமாகி பரிசமும் வாங்கியாய்விட் டது. அதைக்கண்ட அர்ச்சுனன் மகன் கடோர்கஜன் அரவான் தொ ந்திச்செட்டி முதலிய அண்ணன் மார் களின் உதவியால் சுந்தரியை பலாத் காரமாகக்கொண்டுவந்து கலியாணம் செய்யப்பட்டது. கலியாணமான சிறிது காளில் சுந்தரிவிதவையாணுன். அவன் யுத்தஸ்தலிருந்த சேர்ப்பம் அஸ் வத்தாமாவினுல் சிதரப்பட்டது அத ற்கு கிருஷ்ணன் தனது புண்ணியத் தைக் கொடுத்து உயிர் கொடுத்தார் அவன் பெயர் பரிக்ஷித்து அவனும் சிறுவடதில் பாம்பு கடித்திறந்தான், சுந்தரியின் அண்ணன் தாயி பவ்வாளி கவென்னம் தாக்களாகவே அடித்துக் கொண்டு இறந்தார்கள். பரிக்ஷித்து க்கு பிரமஹத்திபிடித்த ஒருபிள்ளேயி ருந்தது அவனும்செத்தான் அவனேதி ந்த வம்சமே ஒழிந்தது. மாமனுர் வீட்டிச் சுகமேயில்லாதச் சுந்தரி கண் டதேயிலே இப்படி வாழ்ந்த சுந்தரி யின் கலியாணத்தைப்போல யாரும் தங்கள் பெண ஆண்கள் வாழ விரும் பவே மாட்டார்கள்.

துரோபதை சுயம்வரம்.

துரோபதை கலியாணத்தைப்போல நமது பெண்களின் கலியாணமும் ஆக ஆசைப்பட்டால், சூதாடவேண் டும் தலேஜரியவேண்டும். மயிர் விரி க்க வேண்டும், காட்டில் பன்னிரண்டு வருடம் அலேயவேண்டும். ஒரு வரு டம் வேலேக்காரியாக விருக்கவேண் டும், பலர் பிடித்திளுப்பதற்கு ஆளாக வேண்டும், இரண்டு மச்சானுக்கும், இரண்டு கொளுந்தனுக்கும் பெண் ஜாதியாக விருக்கவேண்டும். இந்தத் தொல்லேக்கு யாரும் தலேயும் கொடுக் மாட்டார்கள், பெண்களும் விரும்பார் கள்.

இந்த கலியாணங்களெல்லாம் ஒழு க்கத்திலும் சுகத்திலுமவாழ்ந்ததல்ல. இவைகளுக்கு தக்கமே அடிப்படை இந்தக்கதைப் பிரகாரமே பணக்காரர் கலிய ணத்திற்கும் ஆசிர்வாதம் வே ண்டுமென்பது நியாயமுமல்ல. அவர் களெல்லாம் கடவுளல்லவா கடவுள் பெருமையைச் சொல்லுவதானே ஸ்தேடம் என்பார்கள். கலியாண வீட்டில் சுகமாகவும், ஒழுக்கமாகவும் வாழாத எத்தக் கடவுள் கதையாக விருந்தாலும் பிரயோஜனமென்ன? அதக் கலியாணக் கதைகளெல்லாம் கலிய ணக்காரர்கள் நினேப்பதற்கு எதிரிடையாகு து. சுகமும். சோப் போக்கும் வேண்டுமென்றும் சுகமாக சந்தோஷமாக ஒழுக்கததோடு வாழ் ந்த அநேகர்கள் கதைகளிருக்கின்றன ஒருவன் கலிய ணத்திற்கு நேரப்போ கவெண்ணத்திற்கு சமாச்சாரம் பேசிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய சகலி தம கேழ்ப்பவர்கள் எத்தனேபேர். நே ரம் கழித்துவரும் பெரியமனிதர்களு க்கு இடையறு செய்து கொடுப்பதற் குள் சகலிதம் தலேதொடியாய் விடு கிறது. சோடாப்புட்டி உடைப்பது சாரத்திற்குமேலே போகிறது இடம தீர்ந்தது.

தஞ்சை முனிசிபல் தலேவர் தேர்தல்.

தஞ்சை முனிசிபல் தலேவர் தேர்தலில் ராவ்பகதூர் சு. அ. சு. ராமனதன் செட்டியார் வெற்றி பெற்றரென ஒரு நிருபர் எழுது கிறார்

சென்ற வருஷத்தில் சுமார் 1750 யாத்ரீகர்கள் ராமமோஹனுடைய ஸ்பெஷல் ரயில்களில் 15000 மைல்கள் வரையில் தூரதேசத்தி லுள்ள புண்ணிய கேஷத்திரங்களுக்கு பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

ராமமோஹனுடைய
வட இந்தியா பிரயாணம்
(நான்காவது பிரயாணம்.)

சென்னையிலிட்டு புறப்படுகிறது பிப்ரவரி மீ 17உ
சென்னைக்கு திரும்பி வருகிறது மார்ச்சு மீ 21உ

வழியில்: துங்கபத்ரை, பல்டார்பூர், பம்பாய், நாசிக், நர்மதை, ஆக்ரா மதுரா பிரிந்தாவன, டெல்லி, ஹரிதுவார், ரிஷிகேஷ், அயோத்தி, பிரயாக், காசி, கயா, கல்கத்தா. கிம்ஹாசலம், ஜெயவாடா முதலிய புண்ணிய கேஷத்திரங்களே பார்க்க நேரிடுகின்றது.

முழுபிரயாணத்திற்கு சார்ஜு
2-வது வகுப்பு ரூ. 180. 3-வது வகுப்பு ரூ. 85.
மஹாசிவராத்திரியன்று காசிவிஸ்வநாதர் தரிசனம்.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்,
ராமமோஹன் கம்பெனி,
பிரயாணிகளுக்கும், யாத்ரீகர்களுக்கும் ஏஜண்டுகள்,
30 லிங்கசெட்டி தெரு, மதராஸ்.

தபால்படிப்பின் அற்புதம்!
1000 மாணவர்கள்
இளமையிற் படிக்கவில்லே என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுததெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெடரிக்குலேஷன் கோர்ஸ்களேத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கிகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர், பாஸ்செய்தபின் காலேஜில சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர், ஹையர்கிரேட் உபாத்தியார்கள், குமாஸ்தாக்கள், ஆபீஸ் கீழ்தர உத்தியோஸ்தர்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. பிராஸ்பெக்டசுக்கு உடனே இரண்டணு ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,
அன்னபயன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆரமுகநேரி S. I. R.

'ஆத்மா'வே பொய்யென்றால்
மகாத்மா என்பதில் அர்த்தமுண்டா?

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்	...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் சூக்ஷ்ட்	...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.)	...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம்	...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு மாதிரித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1.00.
வெளிநாடு ,, இந்தியா $ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சிப்போ.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—2—0
தனிப்பிரதி	ரூ.	0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

புதிய சந்தாதாரர்களுக்கு
இலவம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணாவிலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள் இனாமாகக்கொடுக்கப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதார்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கவலக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்த வினாற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள வழுல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம, இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம, மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, வரை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைதப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணை கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0

பங்களாம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதரசி "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0 3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராக வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணை 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.